Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ ராம்கோ
MADRAS CEMENTS LTD.
RAMCO CEMENT
சீமேந்து
(சி-653)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 06 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 16 (20.03.2003) வியாழக்கிழமை இதழ் :168

# அமைதி முயற்சி முன்னேறினாலே

# வெளிநாட்டு நிதியுதவி கிட்டும்!

## பேச்சுக்களில் அகாஷி வலியுறுத்து

(ரோக்கியோ)

அடுத்த மூன்று மாதங்களுக்குள் அரசும் விடுதலைப்புலிகளும் சமாதான நடவடிக்கையில் முன்னேற்றம் கண்டால் மாத்திரமே வெளிநாட்டு நிதியுதவிகள் வழங்கப்படுமென நேற்றைய பேச்சுக்களில் கலந்துகொண்ட ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷி சுட்டிக்காட்டினார்.

பேச்சுக்களில் வெளியிடப்படும் வார்த்தைகள் மட்டும் போதாது. இரு தரப்பும் - இணக்கம் காணப்படுபவை சரியாக அமுல்செய்யப்படுகிறதா என்பதையும் கவனிக்க வேண்டும் என்றும் அகாஷி குறிப்பிட்டுள்ளார்.

## நேற்றைய பேச்சுக்களில் அகாஷி, இயன் மார்ட்டின்

ஆறாம் கட்ட சமாதானப் பேச்சுக்களின் நேற்றைய காலை அமர்வில், ஜப்பானின் சிறப்புத் தூதுவர் யசுசி அகாஷி கலந்துகொண்டார். காலை அமர்வில் நிதியுதவி, அபிவிருத்தி குறித்த விடயங்கள் பேசப்பட்டன.

இதேசமயம், மாலை அமர்வில் மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த இயன் மார்ட்டின் கலந்து கொண்டார். இம்மாலை அமர்வில், மனித உரிமை குறித்த விடயங்கள் ஆராயப்பட்டன.

இதேசமயம், இன்றைய பேச்சுக் (10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



விடுங்கோ வீட்டை எண்டால், வளவைப் பிடிக்கிறம் எண்டெல்லோ நிக்கினம்...!

# குடாநாட்டில் மக்கள் காணிகளில் குடியமரும் பலகல்லவின் திட்டத்தை ஏற்க புலிகள் மறுப்பு!

## அதுவும் பொதுமக்கள் சொத்தே என பாலா தெரிவிப்பு



நேற்றைய சமாதானப் பேச்சுக்களின் காலை அமர்வில் ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசுசி அகாஷி கலந்து கொண்டமை, இப்பேச்சுக்கள் சர்வதேசப் பரிமாணத்தை அடைந்துள்ளதைக் காட்டுகின்றது என, புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.


நேற்றுக்காலை அமர்வின் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்து, இவ்வமர்வில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து பாலசிங்கம் விபரித்தார்.

அவர் அங்கு பேசும்போது, ஜப்பான் நாட்டில் நடைபெறும் பேச்சுக்களில் ஜப்பானியர் ஒருவர் புலிகளுடனும், அரச தரப்பினருடனும் சேர்ந்து இப்பேச்சுக்களில் கலந்துகொண்டமை ஒரு முக்கிய அம்சமாகும்.

உலகப் பொருளாதார வல்லரசும் எம்முடன் சேர்ந்து நிதியுதவி குறித்துப் பேச்சு நடத்தியுள்ளது. எதிர்வரும் ஜூன் மாதம் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் ஜப்பானில் நடைபெறவுள்ளது. உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் கால அட்டவணை (10 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேசக் கடற்பரப்பில் வீரச்சாவடைந்தோர்

கடந்த 10.03.2003 அன்று திருகோணமலையில் இருந்து 220 கடல்மைல் தொலைவில் வைத்து, கடற்படையினரால் விடுதலைப் புலிகளின் சரக்குக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டபோது, வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 11 போராளிகளினதும் விபரங்களை விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு,




Merchant Vessel's Captain
**சிலம்பரசன்/றஞ்சன்**
ஆழியவளை, யாழ்ப்பாணம்.



Chief Officer
**இரும்பொறை**
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.




Second Officer
**சுடர்ணன்**
கள்ளப்பாடு, முல்லைத்தீவு.



Third Officer
**மேகன்**
பன்குளம், திருகோணமலை



Chief Engineer
**அம்பிகைவாணன்**
சித்தங்கேணி, யாழ்ப்பாணம்.




Second Enginner
**தணிகைமாறன்/தனேந்திரன்**
மாரீசன்கூடல், யாழ்ப்பாணம்




Third Engineer
**அமுதன்**
மட்டுவில்நாடு, கிளிநொச்சி.




Able Seaman
**இளம்பருதி**
அளவெட்டி, யாழ்ப்பாணம்.



Able Seaman
**எழில்கண்ணன்**
நீர்வேலி, யாழ்ப்பாணம்



Cadet
**தூயவன்**
திருவையாறு, கிளிநொச்சி.



Bosun
**நவநீதன்/சிந்து**
கொக்குவில், யாழ்ப்பாணம்.

# ஐந்து திட்டக் கிராமங்கள் தீவகத்தில் தெரிவாகின!

ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில், ஐந்து கிராமங்கள் - திட்டக் கிராமங்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

காரைநகர்ப் பகுதியில் இருந்து காரைநகர் தெற்கு, காரைநகர் வட-கிழக்கு, சாம்பேலோடை என்பனவும், ஊர்காவற்துறையில் இருந்து ஊர்காவற்துறை கிராமப்பகுதி மற்றும் சூரியாவத்தை என்பவையுமே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ள திட்டக் கிராமங்களாகும்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ள ஐந்து திட்டக் கிராமங்கள் தொடர்பான விபரங்கள், யாழ்.அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (100)

# புலிகளுடன் இணையச் சென்ற சிறுவன் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(சரசாலை)

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணையச்சென்ற 16 வயதுச் சிறுவன, வீட்டுக்குக் கொண்டுசென்று அவரின் பெற்றோரிடம் ஒப்படைக்கப் பட்டார்.

கடந்த திங்கள், குடமியன், வறணியைச் சேர்ந்த, மகேந்திரன் கஜன (வயது 16) என்ற சிறுவன் விடுதலைப் புலிகளின் அரசியற்துறையிடம் வந்து, இயக்கத்தில் இணைய வந்ததாகத் தெரிவித்தார்.

18 வயதுக்குக் குறைந்தவர்களை தமது அமைப்பில் இணைப்பதில்லை என்ற தீர்மானத்தின்படி, சாவகச்சேரி அரசியல் பொறுப்பாளர், அச்சிறுவனை அவரது வீட்டுக்குக் கூட்டிச்சென்று பெற்றோரிடம் ஒப்படைத்தார். (34)


YOGI BEAUTY PARLOUR
LADIES HERBAL BEAUTY CARE & FITNESS CENTRE

யாழ்.நகரில் முதன்முறையாக பெண்களுக்காக எமது அழகு நிலையம் இயந்திர சாதனங்கள் மூலமாக நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் நவீன உடற்பயிற்சி சாதனங்கள் மூலமாக பெண்கள் கட்டான உடலமைப்பைப் பெறுவதற்காக பெண்களுக்கான ஜிம் (GYM) பயிற்சி வசதிகளும் செய்யப்பட்டுள்ளது என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

* முகப்பரு சிகிச்சை
* பொடுகு சிகிச்சை
* முடி உதிர்தலுக்கான சிகிச்சை

(HIGH FREQUENCY TREATMENT)

* HAIR REBONDING
* HAIR PERMING
* HAIR COLOURING
* GOLD FACIAL
* PEARL FACIAL

(SUPERSONIC TREATMENT)

* கரும்புள்ளிகள் அகற்றுதல் (WITH SPOT REMOVER)

உங்கள் எண்ணத்தில் எங்கள் கைவண்ணம்

சகல மங்கள வைபவங்களுக்கும் ஏற்ற ஒப்பனை அலங்காரங்களை வித்தியாசமாகவும் அழகாகவும் திருப்தியாகவும் செய்து கொள்வதற்கு எம்மை நாடுங்கள்.

நீங்களும் அழகுக்கலை நிபுணர்களாக விரும்புகிறீர்களா?

எமது அழகு நிலையத்தில் தற்பொழுது அழகுக்கலை Diploma பயிற்சி வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

"Jenet" Herbal Cosmetics Creams எம்மிடம் விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு:-
MRS. YOGINI SHANMUGANATHAN
Dip.in.cosmetology, Beauty therapy, Hair Dressing & Home Science (India, Co.Srilanka)
222 2796
75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக) (285)


# அரியாலை, கொழும்புத்துறை பகுதிகளில் இரவு வேளைகளில் கடத்தப்படும் மணல்

கொழும்புத்துறை, அரியாலை, நெடுங்குளம் பகுதிகளில் இரவு வேளைகளில் மணல் கடத்தப்படும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன.

மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள பகுதிகளிலேயே, இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்துள்ளன. பகல் வேளைகளிலும் பார்க்க இரவு வேளைகளில், பெருந்தொகையான உழவு இயந்திரங்கள் இம்மணல் அகழ்வில் ஈடுபடுவதாகத் தெரியவருகின்றது.

இவ்வாறு மணல் அகழ்ந்தெடுக்கப்படுமிடத்து, தாம் தமது நிலங்களில் எதிர்காலத்தில் குடியமர முடியாதநிலை ஏற்படும் என்றும், இராணுவ நிலைகளில் பெரும்பாலானவை இப்பகுதியில் காணப்படுவதாலும் தாம் இதனைத் தடுக்க முடியாத நிலையில் இருப்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

## க.பொ.த.உயர்தர வழிகாட்டல் வகுப்பு

(யாழ்ப்பாணம்)

மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினர் நடாத்தும், க.பொ.த.(உ/த) கிறிஸ்தவ பாடநெறிக்கான முன்னோடி வழி காட்டல் வகுப்புகள், நாளை மறுதினம் சனிக்கிழமை தொடக்கம் மூன்று நாட்களுக்கு, காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை, "அகவொளி" குடும்ப வளத் துணை நிலையத்தில் நடைபெறவுள்ளன.


சிறு விளம்பரம்

தேவை

மினித் திரையில், எலக்ரோணிக் துறையில் அனுபவம் உள்ள ஒருவர் தேவை. திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும். உடன் நேரில் வரவும். புஸ்பாமினி, நவாலி வீதி, ஆனைக்கோட்டை. (286)

ராஜா யாழ்ப்பாணம்.
சரத்குமார், மீனா, விஜயகுமார், வடிவேல் நடித்த
மாயி
நேரம்:- 10.30, 2.30, 6.30 (சி-628)

நிறஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
அர்ஜுன், பூஜா நடித்த
சூரியபார்வை
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி
RUSH HOUR - 2 (சி-627)


# பளை வைத்தியசாலை புனரமைப்பு ஆரம்பம்

(மானிப்பாய்)

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் பலத்த சேதங்களுக்கு உள்ளான பளை வைத்தியசாலை துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

வைத்தியசாலை வளவில் காணப்பட்ட கண்ணிவெடிகள் அண்மையில் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து, சேதமடைந்த கட்டட இடிபாடுகள் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

இவ் வைத்தியசாலைக்குச் செல்லும் வீதியில் காணப்பட்ட பாரிய குழி மூடப்பட்டு வீதியும் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. (100)

# நிவாரண விநியோகத்தில் பால்மா பைக்கற்றுக்கள்!

## - கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்பாடு -

ஜனவரி மாதத்திற்குரிய நிவாரண ஒதுக்கீடு ப.நோ.கூ.சங்கங்களிற்கு விநியோகிக்கப்படவுள்ளதால், சகல ப.நோ.கூ.சங்கங்களும் நாளை வெள்ளிக்கிழமை, செயலகப் புனர்வாழ்வுப் பகுதியில் தங்களுக்குரிய ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அத்துடன், ஜனவரி மாதத்திலிருந்து நிவாரண விநியோகங்களின்போது, நுகர்வோர், பால்மா பைக்கற்றினை தாம் விரும்பும் பட்சத்தில், ப.நோ.கூ.சங்கங்களில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அதற்குப்பதிலாக, அதன் பெறுமதிக்கு அளவான நிவாரணத்திற்குரிய ஏனைய பொருட்களில், தாம் விரும்பும் பொருட்களின் அளவைக் குறைத்துப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு, ப.நோ.கூ. சங்கங்கள் தமக்குத் தேவையான பால்மா பைக்கற்றுக்களைத் தெரிவித்து, அதற்கான ஒதுக்கீட்டினை செயலக புனர்வாழ்வுப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

# மக்கள் வங்கி நடத்தும் சிசு உதான அறிவுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் மக்கள் வங்கி, 'சிசு உதான' கணக்கு வைத்திருக்கும் பாடசாலை மாணவர்களுக்கிடையே, பொது அறிவுப் போட்டித்தொடர் ஒன்றை நடாத்தவுள்ளது. இப்போட்டியில் பங்கு பற்றுவதற்கு, ஒரு பாடசாலையில் இருந்து 6 பேர் அதிபரால் நியமிக்கப்படலாம் என, மக்கள் வங்கி யாழ். பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

விபரங்களைப் பெறவிரும்பும் யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலை அதிபர்கள், தமது பாடசாலை மாணவர்கள் கணக்கு வைத்திருக்கும் மக்கள் வங்கிக் கிளை முகாமையாளருடன் தொடர்புகொள்ளுமாறு, மக்கள் வங்கி யாழ்ப்பாணப் பிராந்திய முகாமையாளர் மு.க.சிவபாதவிருதையர் கேட்டுள்ளார்.

இதற்கான விண்ணப்ப முடிவு திகதி, இம்மாதம் 26 ஆம் திகதியாகும்.


# பாராட்டும் வாழ்த்துக்களும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது துணைவேந்தராகப் பதவியேற்ற அரியாலை மைந்தன்

## பேராசிரியர் சுப்பிரமணியம் மோகனதாஸ்

அவர்களை



B.Sc.Hons (S.L), Ph.D (adelaide), C.Chem, F.I Chem.C

பாராட்டி வாழ்த்துவதுடன் அவரது பதவிக்காலத்தில் யாழ்.பல்கலைக்கழகம் சகல துறைகளிலும் வளர்ச்சி அடைந்து மிளிர அரும்பணியாற்றுவதுடன், அவர் தனது சேவையைக் கல்விச் சமூகத்திற்கு வழங்கி, யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தை நிலைநாட்ட வழிகாட்டியாக விளங்கவேண்டும் என அரியாலை மக்கள் சார்பில் வேண்டி நிற்கின்றோம்.

அரியாலை மக்கள் சார்பில்

* அரியாலை ஐக்கிய கழகம்
* அரியாலை சுதேசிய திருநாள் விழா நிர்வாகம்
* அரியாலை சனசமூக நிலையம்
* அரியாலை திருமகள் சனசமூக நிலையம்
* அரியாலை கலைமகள் சனசமூக நிலையம்
* கச்சேரி கிழக்கு சனசமூக நிலையம்
* அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானசபை
* அரியாலை இளைஞர் இந்துமா மன்றம்
* அரியாலை அபிவிருத்திச்சங்கம்
* அரியாலை சைவ ஆலயங்களின் நிர்வாகங்கள்
* அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம்
* அரியாலை அருணோதயா சனசமூக நிலையம்
* அரியாலை கலாமன்றம்
* அரியாலை விவசாய சம்மேளனம்
* அரியாலை மத்திய விளையாட்டுக்கழகம்
* அரியாலை சரஸ்வதி சிக்கன கூட்டுறவுக் கடனுதவிச் சங்கம்
* நல்லூர் தெற்கு சனசமூக நிலையம்

(சி-695)


# இன்றைய நாள் இனிய நாள்

**20-03-2003 - வியாழக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- மனமகிழ்ச்சி, புதிய கருமங்களில் ஈடுபாடு, தொழில் விருத்தி, புத்திர, களஸ்திர மகிழ்ச்சி. |
| இடபம் | :- புத்திரரால் கவலை, தேகசுகக்குறைவு, பலராலும் வெறுக்கப்படுதல், உடற்சோர்வு. |
| மிதுனம் | :- அதிகார விருத்தி, பூமியால் லாபம், நற்குணவிருத்தி, உயர்ந்த நிலை. |
| கர்க்கடகம் | :- தாரசுகத்தடை, இரத்தப் பெருக்கு, திருடர் பயம், பொருட்சேதம். |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| சிங்கம் | :- பணக்குறைவு, பலவழிகளாலும் செலவுகள், காரிய திறமை, புதியஸ்தானம். |
| கன்னி | :- தேகபலக்குறைவு, சீவனநிறைவு, நன்மதிப்பு, குடும்ப மனஸ்தாபம், தூக்கக்குறைவு. |
| துலாம் | :- அதிக பிரயாசம், தேகமெலிவு, தனித்தநிலை, தாரபுத்திரரால் கவலை. |
| விருச்சிகம் | :- வாக்கு வசீகரம், நன்மதிப்பு, இல்லச்சிறப்பு, சமாதான வாழ்வு. |
| தனு | :- தொழில் குறைவு, வீண்பழி கேட்டல், முயற்சிக்கேற்ற பலனின்மை, பொருட்சேதம். |
| மகரம் | :- தொழில் வெற்றி, வாகனலாபம், வாக்கு வசீகரம், நன்மதிப்பு, மனமகிழ்ச்சி. |
| கும்பம் | :- குடும்ப மனஸ்தாபம், பலவித ரோகபீடை, கொடுக்கல் வாங்கல் சிறப்பின்மை, |
| மீனம் | :- நற்கீர்த்தி, காரிய வெற்றி, வாக்கு வசீகரம், சரீர ஆரோக்கியம், குடும்பசுகம். |

# சர்வதேச அமைப்புகளின் மேற்பார்வையில் வடக்கு - கிழக்கு புனரமைப்புப் பணிகள்

## ஒவ்வொரு அமைப்புக்கும் துறைகள் பகிர்ந்தளிப்பு

வட-கிழக்குப் பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்களில் இணைந்து செயற்படுவதற்குப் பல்வேறு சர்வதேசத் தொண்டர் அமைப்புக்கள் முன்வந்துள்ளன.

யுத்தத்தினால் சீரழிந்துள்ள பிரதேசங்களின் புனரமைப்புக்களில் உதவுவதற்காக இந்தத் தொண்டர் அமைப்புக்கள் உதவிகளைச் செய்யவுள்ளன.

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் - கிடைக்கும் நிதியுதவியைப் பயன்படுத்தி, இந்தப் புனரமைப்பு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இதற்காகத் துறைரீதியான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

மீள்குடியமர்வுக்கு- யு.என்.எச்.சி.ஆரும், வீதிகள் அபிவிருத்திக்கு- ஆசிய அபிவிருத்தி வங்கியும், தொலைத்தொடர்பு, தொடர்பாடல் வசதிகளை- உலகவங்கியும், சக்தி வலுவை ஆசிய அபிவிருத்தி வங்கியும், கல்வி அபிவிருத்திக்கு யுனிசெப்பும், சுகாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு - உலக சுகாதார நிறுவனமும், வீடமைப்பு வசதிகளை- உலகவங்கியும், குடிநீர் விநியோகத் திட்டங்களை ஆசிய அபிவிருத்தி வங்கியும், தொழில் வாய்ப்புத் திட்டங்கள் மற்றும் தொழிற் பயிற்சிகளைச் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனமும், துறைமுகங்கள் மற்றும் ரயில்வேத்துறையை ஆசிய அபிவிருத்தி வங்கியும், விவசாய முயற்சிகளை உலக உணவுத் திட்டமும், நுண்நிதித் திட்டங்கள் மற்றும் வருவாய் பெருக்கத் திட்டங்களை ஆசிய அபிவிருத்தி வங்கியும், யு.என்.டி.பியும் இணைந்தும், நிர்வாகத்தை யு.என்.டி.பியும் மேற்பார்வை செய்வதற்கு இணங்கியுள்ளன.

## காவலரண் அகற்றப்பட்டது

(இளவாலை)

இளவாலை சென்.ஜேம்ஸ் வீதியில் பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் அமைக்கப்பட்டிருந்த காவலரண் அகற்றப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடையூறாக, வீதியின் குறுக்கே அமைக்கப்பட்டிருந்த இந்தக் காவலரண் பற்றிய புகைபபடம் "நமது ஈழநாடு" பத்திரிகையில் பிரசுரமானதையடுத்து பொலிஸ்மா அதிபரின் பணிப்பின்பேரிலேயே இக்காவலரண் அகற்றப்பட்டதாகத் தெரியவருகின்றது. (71)

## குணமாக்கல் வழிபாடு

(மானிப்பாய்)

யாழ். அடைக்கல அன்னை ஆலய முன்றலில் மாலை 3.30 மணிமுதல் இரவு 7 மணிவரை இந்தியாவிலிருந்து வந்திருக்கும் போட்டா ஆச்சிரம இறை தியானக் குழுவினரால் குணமாக்கல வழிபாடுகள் நேற்றுமுதல் நடத்தப்படுகின்றன.

நாளைவரை நடைபெறும் வழிபாடுகளில் தங்கியிருந்து பயன்பெறவும், இறுதியில் பேருந்தில் வீடு திரும்பவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக ஆயர் இல்லம் அறிவித்துள்ளது.

(100)

# விமான நிலையப் பணிப்பாளரை வீட்டுக்கு அனுப்புமாறு உத்தரவு!

## புலிகளுக்கு உதவியதாக சந்திரிகா குற்றச்சாட்டு



(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலைய, விமானசேவைப் பணிப்பாளரைக் கட்டாய ஓய்வில் அனுப்பிவிட்டு, அவர் குறித்த பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்துமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு- ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டார்.

விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுடன் நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்ததான குற்றச்சாட்டுக் குறித்தே, கட்டுநாயக்க விமானநிலைய, விமானசேவைப் பணிப்பாளரான காமினி அபேவர்த்தன மீது விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா பணித்துள்ளார்.

எமில், செல்வின், பூவண்ணன் ஆகிய புலிகளின் முக்கியஸ்தர்களுடன் நெருக்கமான தொடர்புகளை இவர் வைத்திருந்ததாகவும், இவர்களுக்கான விமானப் பயண ஒழுங்குகளைச் செய்து கொடுத்ததாகவும் அபேவர்த்தனா மீது ஜனாதிபதியால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.



திலக் மாரப்பன

அத்துடன், புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனை- விமான நிலைய அதிகாரியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் தங்க அனுமதித்ததாகவும் அபேவர்த்தன மீது ஜனாதிபதி சந்திரிகா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்தி, தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும், அபேவர்த்தனவைக் கட்டாய ஓய்வில் அனுப்புமாறும் திலக் மாரப்பனவுக்கு - ஜனாதிபதி சந்திரிகா பணிப்புரை விடுத்துள்ளார்.

(க)

# இலங்கையரின் பாதுகாப்பு குறித்து பிரதமருடன் ரிரோன் ஆராய்வு

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்குமானால் வளைகுடாவில் உள்ள இலங்கையர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் தொடர்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ ஆராய்ந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் இருவரும் இது தொடர்பாக ஆராய்ந்தனர். இதன்போது, வளைகுடா நாடுகளில் இரண்டரை லட்சம் இலங்கையர்கள் தங்கியிருப்பதாகவும் போர் அபாயம் ஏற்பட்டால் அவர்களைப் பாதுகாப்பாக திருப்பி அழைத்துக் கொள்வது குறித்தும் ஆராயப்பட்டது.

ஈராக்கில் 27 இலங்கையர்கள் மட்டுமே தங்கியிருந்ததாகவும் இவர்களில் அநேகமானோர் அங்கிருந்து வெளியேறிவிட்டதாகவும் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரிவித்தார்.

## விடுமுறைக்கால ஓவிய பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

விடுமுறைக்காலத்தை மாணவர்கள் பயனுள்ளதாக்க - கந்தர்மடத்திலுள்ள சித்திரப் பயிற்சி நிறுவனம், இளம் ஓவியக் கலைஞர்களை ஒன்றிணைத்து இலவச ஓவியப் பயிற்சிப்பட்டறையை ஏப்ரல் 16 ஆம் திகதியிலிருந்து நடாத்தவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள், தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ - இயக்குநர், சித்திரப்பயிற்சி நிறுவனம், ஆத்திசூடி வீதி, கந்தர்மடம் எனும் முகவரியில் பதிவுசெய்யுமாறு கேட்கப்படுகின்றனர்.

# இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர் கல்கிசையில் சுட்டுக் கொல்லப்பட்டார்!

(கொழும்பு)

இராணுவப் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் ஒருவர் கல்கிசையில் வைத்து நேற்றுமுன்தினமிரவு இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

குழந்தைகளுடன் பீரிஸ் அவெனியூவிலுள்ள தனது வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோதே, அவர் மீது சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கியால் சுட்டனர். நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ரகுபதி என்ற இராணுவப் புலனாய்வுப்பிரிவு உத்தியோகத்தரே உயிரிழந்தார்.

இவர் முன்னர் மட்டக்களப்பு இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து செயற்பட்டவர் என்றும், புலிகளின் அச்சுறுத்தலையடுத்தே கொழும்பில் வசித்து வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.


அத்துடன், இந்தக் கொலைக்குப் புலிகளின் பிஸ்டல் குழுவினர் காரணமாக இருக்கலாம் என்று இராணுவத்தரப்பும், பொலிஸாரும் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்திவந்த இராணுவப் புலனாய்வுப்பிரிவிலும், அத்துருகிரியவில் ஆயுதங்களை மறைத்து வைத்திருந்த இராணுவப் புலனாய்வுப்பிரிவிலும் இவர் அங்கம் வகித்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# நவீன வசதிகள் கல்விச் செயற்பாட்டுக்கு தடையாக அமைந்துவிடக்கூடாது!

## பதவியேற்றபின் துணைவேந்தர் தெரிவிப்பு

யாழ்.மாவட்டத்தின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டுமெனப் புதிதாகப் பதவியேற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் மோகனதாஸ் நமது நிருபரிடம் தெரிவித்தார்.



நேற்றுக் காலை தனது பதவியை ஏற்றுக்கொண்ட பின்னர்- எமது செய்தியாளிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இளம் கல்விச்சமூகமானது நவீன சொகுசு வசதிகளினால் தவறான வழிகளில் செல்கின்றது. இவை மாற்றி அமைக்கப்படவேண்டும். இதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடவேண்டும்.

கல்வி என்பது இலகுவானது. முற்றுமுழுதாக அதனைப் பெற அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். நவீன வசதிகள் கல்விச் செயற்பாட்டிற்குத் தடையாக அமையக்கூடாது என அவர் மேலும் தெரிவித்தார்.

துணைவேந்தர் மோகனதாஸ் முன்னர் வவுனியா வளாகப் பீடாதிபதியாகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (சு,ரா)


# அதிரடிப்படையின் வீதித்தடைகளை அகற்றுமாறு புலிகள் வற்புறுத்து

காரைதீவு, துறைநீலாவணை விசேட அதிரடிப்படை முகாம்களின் முன்பாகப் போடப்பட்டுள்ள வீதித்தடைகளை அகற்றவேண்டும் என்று விடுதலைப் புலிகளின் மட்டு.-அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இக்கலந்துரையாடல் கொக்கட்டிச்சோலைப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில், அரசதரப்பு மற்றும் புலிகள் தரப்பு உள்ளூர் கண்காணிப்பாளர்களும் மட்டு. - அம்பாறை மாவட்டங்களுக்கான சர்வதேச கண்காணிபபாளர்களும் கலந்துகொண்டனர். இக்கலந்துரையாடலின்போது, அம்பாறை மாவட்டத்தில் விசேட அதிரடிப்படையினருடனான சந்திப்பு அவசியமற்றது என்றும் முடிவெடுக்கப்பட்டது.





ஹெக்கோனில் நடைபெறும் பேச்சுக்களின் நடுவே தேநீர் இடைவேளையின்போது உரையாடும் அகாஷி, சொல்ஹெய்ம், மிலிந்த ஆகியோரை முதலாவது படத்திலும் ஹக்கீம், பீரிஸ், ஹெல்கிசன், அகாஷி ஆகியோரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## மதில் இடிந்து சிறுவன் பலி

மதில் இடிந்து விழுந்ததில் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் ஒருவர் பரிதாபமாக மரணமானார். மதிலுக்கு அப்பால் வாழைமரத்தினை வெட்டியபோது, வாழைமரம் மதில் மேல் சரிந்ததினால்- மதில் இடிந்து கு.கணேசன் என்ற சிறுவன் மீது விழுந்துள்ளது.

வண்ணார்பண்ணை- பண்டிக்கோட்டுப் பிள்ளையார் கோயிலுக்கு அருகேயுள்ள வீதியிலேயே நேற்று முன் தினம் மேற்படி பரிதாப சம்பவம் நிகழ்ந்தது.

## பாடசாலைக்கு புதிய மாடிக் கட்டடம்

(மானிப்பாய்)

பருத்தித்துறை - தென்புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் சுமார் 12 இலட்சம் ரூபா செலவில் புதிய மாடிக்கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலைக் கட்டட வேலைக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு வழங்கிய 5 இலட்சம் ரூபாவுடன், வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம் வழங்கிய 7 இலட்சம் ரூபாவும் சேர்க்கப்பட்டு - 12 இலட்சம் ரூபா செலவில் இம்மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (100)

## இலவச களைகொல்லி

(மானிப்பாய்)

பாதீனியக் களையினைக் கட்டுப்படுத்துவதற்கு இலவசமாகக் களை கொல்லி மருந்து- புத்தூர் கமநல சேவை நிலையத்தினால் விநியோகிக கப்பட்டு வருகின்றது.

புத்தூர் கமநலசேவை பிராந்தியத்திலுள்ள விவசாய சம்மேளனங்கள், விவசாய அமைப்புக்கள், பொது நிறுவனங்கள் அதனைப் பயன்படுத்துமாறு விவசாயப் போதனாசிரியர் எஸ்.தம்பிராஜா வேண்டுகோள் விடுததுள்ளார். (100)

## பழமரங்களுக்குத் தெளி கருவிகள்

(மானிப்பாய்)

பழமரங்களுக்குக் கிருமிநாசினி விசுறும் தெளிகருவிகள் குடாநாட்டிலுள்ள கமநலசேவை நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாமரங்களில் பாதிப்பை ஏற்படுத்தும் பூச்சிகளினால், மாம்பழ உற்பத்தி பெருமளவில் பாதிப்படைந்து வருகிறது.

கிருமிநாசினி தெளிப்பதால்- மாம்பழங்களின் தரத்தையும், உற்பத்தி அளவையும் அதிகரிக்கச் செய்யலாம் எனக் கூறப்படுகிறது. (100)

# கீரிமலையைப் புனிதப் பிரதேசமாக்க வேண்டும்; வலி.வடக்கு புனர்வாழ்வுக் கழகம் கோருகிறது!

(கொக்குவில் மேற்கு)

கீரிமலைப் பிரதேசத்தைப் புனித நகராக்கி அபிவிருத்தி செய்து தருமாறு கோரி - இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனுக்கு வலிகாமம் வடக்கு புனர்வாழ்வுக் கழகத்தினர் கடிதம் அனுப்பியுள்ளனர்.

வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட புராண, இதிகாச காலச் சிறப்புக்களையுடைய இவ்வாலயம்- கடல்நீரும், ஊற்றுநீரும் கலக்கும் சங்கம தீர்த்தத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது. எனவே, இவ்வாலயத்தைப் புனரமைப்புச் செய்வது அவசியம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கீரிமலை அபிவிருத்தி தொடர்பாக 30.11.1979 இல் யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெற்ற கூட்டத்தில்- அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டு, நில அளவைகள் செய்து நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன. வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இடையிலேற்பட்ட அரசியற் குழப்பங்களால் கடந்த 20 வருடங்களுக்கும் மேலாகப் புனரமைப்புப் பணிகள் தடைப்பட்டமை பற்றியும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பழைய பூங்கா பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றல்

(யாழ்ப்பாணம்)

கண்ணிவெடி அகற்றும் குழுவினர்- யாழ்.செயலகத்துக்கு முன்பாக அமைந்துள்ள பழைய பூங்காப் பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த காலப்பகுதியில் இப்பிரதேசத்தில் இராணுவத்தினர் நிலை கொண்டிருந்தனர். எனவே, இப்பகுதியில் வெடிபொருட்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தினாலேயே இப்பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணி மேற்கொள்ளப்படுவதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன், 1999 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிம்பாப்வே கண்ணிவெடி அகற்றும் குழுவினர் பழைய பூங்காவின் ஒரு பகுதியிலிருந்த வெடிபொருட்களை அகற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(சு,ரா)

## அன்னை பூபதி நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

இந்தியப் படைக்கெதிராக உண்ணாநோன்பிருந்து ஈகச்சாவை எய்திய அன்னை பூபதியின் 15 ஆம் ஆண்டு நினைவு நாட்கள் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளன.

நேற்று முதல் ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதிவரை நினைவு நாட்கள் அனுஷ்டிக்கப்படும்.

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை பி.ப 2.30 மணிக்கு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் பிரதேசசெயலர் கே.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

## பழுதடைந்த இறைச்சி விற்றவர் அகப்பட்டார்

குருநகர் சந்தையில் பழுதடைந்த மாட்டிறைச்சியை விற்பனை செய்த நபர் சுகாதாரப் பரிசோதகர்களிடம் அகப்பட்டார்.

நேற்று நடைபெற்ற இச்சம்பவத்தில் அறுபது கிலோ பழுதடைந்த இறைச்சியை மேற்படி நபர் விற்றுக் கொண்டிருந்தபோது, இது குறித்து சுகாதாரப்பரிசோதகரிற்கு அறிவிக்கப்பட்டது. தான் பழுதடைந்த இறைச்சியை விற்றதை அவர் ஒப்புக்கொண்டார். முழு இறைச்சியும் அவ்விடத்திலேயே அழிக்கப்பட்டது. (ரா,சு)

# தனியார் வாகனங்களில் வருவோர் வெயிலில் வைத்துச் சோதனை!

(முகமாலை)

தென்பகுதியிலிருந்து தனியார் வாகனங்களில் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குவரும் பயணிகளை, முகமாலைச்சோதனைச் சாவடியில் படையினர் வெயிலில் வைத்து சோதனை செய்து வருவதையிட்டு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பயணிகளுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு வெளியில் மேசைகள் வைக்கப்பட்டு, பயணப்பைகள் சோதனையிடப்படுகின்றன.

இதேவேளை, ஓமந்தையிலிருந்து போக்குவரத்துக்கழக பஸ்களில் வரும் பயணிகள் - மண்டபம் போன்ற இடங்களில் வைத்து சோதனையிடப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

# களுத்துறைத் தமிழ்க் கைதிகளின் வழக்குகள் தமிழ்ப் பகுதிகளுக்கு

(யாழ்ப்பாணம்)

களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நாற்பத்தைந்து கைதிகளது வழக்குகளை வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் உள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் முன்னெடுத்து வருகின்றது.

கடந்த திங்கட்கிழமை மேற்படி நிலையத்தினர் சட்டமா அதிபர் கமல சபேசனைச் சந்தித்து கலந்துரையடியபோது - சட்டமா அதிபர் நான்கு வழக்குகளைத் தவிர ஏனைய வழக்குகளை வடக்கு-கிழக்கு நீதிமன்றங்களுக்கு மாற்றமுடியும் எனத் தெரிவித்துள்ளார்.

தலதாமாளிகை குண்டு வெடிப்பு வழக்கு, ஜனாதிபதி கொலை முயற்சி வழக்கு, கட்டுநாயக்க விமான நிலைய தாக்குதல் வழக்கு, தெகிவளை ரயில் குண்டுவெடிப்பு வழக்கு என்பன, வட-கிழக்குப் பகுதிகளுக்கு மாற்றமுடியாது எனச் சட்டமா அதிபர் கூறிய வழக்குகள் எனத் தெரியவருகின்றது.

இதேவேளை, களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க்கைதிகளின் வழக்குகளை வட - கிழக்குக் பகுதிகளுக்கு மாற்றுவது குறித்துச் சட்டத்தரணிகள் நேற்று முன்தினம் நேரடியாக ஆராய்ந்துள்ளனர். களுத்துறைச் சிறைச்சாலைக்கு விஜயம் செய்த சட்டமா அதிபரின் அலுவலக சட்டத்தரணிகள், கைதிகளிடம் இருந்து வழக்குகள் தொடர்பான விளக்கங்களைப் பெற்றனர்.

இதேவேளை, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கலாகியுள்ள வழக்குகளை துரிதமாக விசாரிக்குமாறு மாவட்ட நீதிவான்களிடம் சட்டமா அதிபர் கோரியுள்ளார்.

# லியோக் கழகத்தின் ஏற்பாட்டில் ஓவியக் கண்காட்சியும் பரிசளிப்பும்

மானிப்பாய் பரிஷ் லியோக் கழகத்தால் நடாத்தப்பட்ட சமாதான ஓவியப்போட்டிக்கு அனுப்பப்பட்ட ஓவியங்களின் கண்காட்சியும், பரிசளிப்பு விழாவும் நாளை காலை 9 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் வெற்றியீட்டியவர்களின் விபரங்கள் வருமாறு-

1 ஆம் இடம் - தினேஸ்குமர் (விக்ரோறியாக் கல்லூரி), 2 ஆம் இடம் - ஜே.காமல் (திருக்குடும்ப கன்னியர் மடம்), 3 ஆம் இடம் - ரீ.கஜேந்திரன் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி).

பாராட்டுப் பரிசுகள் பெறுவோர்-

ச.திலக் பிரகாஷ் (மானிப்பாய் மெமோறியல்), வி.புனிதவிசித்திரன் (சாவகச்சேரி ட்றிபேக் கல்லூரி), கு.கோபிநாத் (சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி), கு.நர்மதா (திருக்குடும்ப கன்னியர் மடம்), ம.கலாரஞ்சனி (இணுவில் மத்திய கல்லூரி), அ.நிரோஜா (கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் கல்லூரி), பா.சுரேஷ்கண்ணா (இணுவில் மத்திய கல்லூரி), இ.தயாளினி (கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் கல்லூரி), அ.மனோகரன் (மானிப்பாய் மெமோறியல்), க.ரூபவினோத் (யாழ்.இந்துக் கல்லூரி).



முதலாம் பரிசுக்குரிய ஓவியம்




இரண்டாம் பரிசுக்குரிய ஓவியம்




மூன்றாம் பரிசுக்குரிய ஓவியம்


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

ஐந்தாவது அகவையில்



பெயர் : தி.கோகுலன்
முகவரி: அர்கின்சன் வீதி, வட்டுக்கோட்டை.

ஒன்பதாவது அகவையில்

பெயர் :இ.கிருஷ்சிகா
முகவரி:தாமோதரம் பிள்ளை வதி, சாவகச்சேரி.



ஒன்பதாவது அகவையில்



பெயர் :கு.கீர்த்தனன்
முகவரி: மீசாலை கிழக்கு, மீசாலை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்

# தென்னந்தோட்ட வருமான அதிகரிப்புக்கு

# உதவக்கூடிய ஊடுபயிர்ச் செய்கை

அண்மைக்கால யுத்த அனர்த்தங்களால் யாழ். குடாநாட்டின் தென்னைச்செய்கை வலயம் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளமை நாம் யாவரும் அறிந்ததே.

தற்பொழுது தென்னந்தோட்டங்கள் மீளுருவாக்கம் செய்யப்பட்டுவரும் இவ் வேளையில், தென்னஞ்செய்கையுடன் இணைந்ததாகப் பல்வேறு பயிர்களை ஊடுபயிர்களாக மேற்கொள்ளலாம்.

அந்தவகையில் தென்னஞ்செய்கையுடன் இணைந்ததாக மேற்கொள்ளப்படும் ஊடுபயிர்கள் பற்றி இங்கு ஆராயப்படுகின்றது.

**தென்னந்தோட்டத்தில்**
**ஊடுபயிர்ச் செய்கை**
**(MAXIMISE LAND USE)**

தென்னை வேர்கள் 25% மண்ணைத்தான் பயன்படுத்துகின்றன. இயற்கை வளங்களைக்கொண்டு தென்னையின் இடையில் ஊடுபயிர்ச்செய்கையை மேற்கொள்வதனால், மிகுதியான மண்ணும் பயன்பட ஏதுவாக இருக்கும். இலங்கையில் 4,00,000 ஹெக்ரயர் தென்னை நிலப்பரப்பில் அண்ணளவாக 1,00,000 ஹெக்ரயரில் ஊடுபயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன், கால்நடைகளும் வளர்க்கப்படுகின்றன.



தென்னைக்குக் கீழே வளர்க்கப்படும் ஊடுபயிர் (INTER CROPPING) கலப்புப் பயிர்ச் செய்கையும், (MULTI CROPPING) கால்நடை வளர்ப்பும் செய்வதனால் தென்னந் தோட்டத்திலிருந்து கிடைக்கும் மேலதிக வருமானத்தினைப் பெறலாம்.

75% - 80% ஆன விளைச்சல்கூடிய பகுதி, மேற்படி ஊடுபயிர் அல்லது கலப்புப் பயிர்ச்செய்கைக்கு உகந்தது. ஆனால், இன்னும் இப்படித் தென்னைச்செய்கையாளர்கள் பயன்படுத்துவது குறைவாகும்.

அகலமாகச் செவ்வகமுறையில் தென்னை நாற்றுக்களை நாட்டினால், இடையில் ஊடுபயிர்ச்செய்கை செய்வது சுலபமாகும்.

தென்னைமரத்திற்குத் தொடர்ச்சியான தண்ணீர் தேவை. எனவே, மழை நேரமாயின், தென்னைக்கும் ஊடுபயிருக்கும் ஈரலிப்புக் கிடைக்கும். இல்லாவிடில், தேங்காய் உற்பத்தி வீழ்ச்சியடையும். எனவே, ஊடுபயிர்ச்செய்கை - ஈரவலயம், ஈரஇடை வலயத்திற்கே பொருத்தமானதாகும். ஆனால், வரண்ட வலயத்திலும் செய்யமுடியும்.

**பொதுவான வழிகாட்டி**

✦ போதுமான அளவு, ஊடுபயிர்ச் செய்கைக்குச் சூரிய ஒளி கிடைப்பதனை உறுதிசெய்யவும். (அல்லது நிழல் - இது பயிரில் தங்கியிருக்கும்) பொதுவாக ஊடுபயிர்ச்செய்கை, முதல் 5 வருடகாலத்திலும், பின்பு 25 வருடத்திலிருந்தும் தென்னைச்செய்கையின் கீழ் செய்யலாம். 5-25 வருடகாலத்தில், சூரிய ஒளி போதுமான அளவு எல்லாப் பயிருக்கும் கிடைக்கும்.

✦ செவ்வகமுறையில் நாட்டப்பட்ட தென்னைச்செய்கையில் 20-25 வருடகாலத்தில் ஊடுபயிர்ச்செய்கையை மேற்கொள்ளலாம்.

✦ ஈரலிப்புக்கு- தென்னைமரத்திற்கும், ஏனைய ஊடுபயிர்களுக்குமிடையில் போட்டி ஏற்படாமல் இருப்பதனை உறுதி செய்யவும்.

✦ மண்ணின் வளம் பாதிக்கப்படாது, வித்தியாசமான பயிர் வகைகளுக்கு வித்தியாசமான மண்வகைகள் தேவை.

✦ எல்லாப் பயிர்வகைகளுக்கும் போதுமான அளவு உரம் கிடைப்பதனை உறுதி செய்யவும். ஏனெனில், ஊடுபயிருக்கு உரம் கிடையாமலிருந்தால் தென்னைக்குப் போட்ட உரத்தினைப் பாவிக்கும்.

✦ சரியான ஊடுபயிரைத் தெரிவுசெய்க. சில இடங்களில் ஊடுபயிர்ச்செய்கை நன்றாக வராததன் காரணம் - பிழையான, பொருத்தமற்ற ஊடுபயிரைத் தெரிவு செய்தமையேயாகும்.

**ஊடுபயிர்ச்செய்கை**
**மேற்கொள்வதனால் - விவசாய,**
**சமூக பொருளாதார நன்மைகள்**

**ஊடுபயிர்கள்**

✦ சேதனக்கழிவுகளை மண்ணுக்கு விடுவதனால் மண்வளம் அதிகரிக்கப்படுகிறது.

✦ மண் வெப்பநிலை குறைக்கப்படுகின்றது.

✦ மண்ணரிப்பு தடுக்கப்படுகின்றது.

✦ களைகள் வளர்வதனைத் தடுக்கின்றது.

✦ மேலதிக வருமானத்தினைப் பெறலாம்.

✦ வேலைவாய்ப்பினை அதிகரிக்கலாம்.

✦ தேங்காயின் விலைத்தளம்பலை ஈடுசெய்து வருமானம் கூட்டப்படுவதற்கு ஏதுவாகின்றது.

**எவ்வகையான பயிர்களை**
**ஊடுபயிர்களாகச் செய்ய முடியும்?**

தென்னைக்குக் கீழே பல்வேறு வகையான பயிர்வகைகளும் வளர்த்தல் - மண் வகையிலும், மண் ஆழத்திலும், மழைவீழ்ச்சியிலும் தங்கியிருக்கும். ஆழமான வேருடைய பயிர்கள், ஆழமான மண்ணிலும், மேலான வேருடைய பயிர்கள் மேலான மண்ணிலும் நாட்டல் வேண்டும். தென்னையின் வயதின் அடிப்படையில் ஊடுபயிர்களைத் தெரிவு செய்யலாம்.

**ஊடுபயிர்ச் செய்கையை**
**எப்படி மேற்கொள்ளலாம்?**

ஒரு பயிர், ஊடுபயிராகத் தெரிவுசெய்யப்பட்டதன் பின்பு, ஒழுங்கான நடுகைமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டும். சில வழிகாட்டல்களைக் கீழே தருகின்றோம்.

✦ கிழக்கு, மேற்காக ஊடுபயிர்களின் வரிசை அமையவேண்டும்.

✦ சரியான இடைவெளியைத் தீர்மானிக்கவும். ஆககுறைந்தது தென்னையின் அடியிலிருந்து 6 அடி தூரத்திற்கு அப்பால்.

✦ ஒரு தொகுதி ஊடுபயிர்களைத் தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக்காற்று மழையுடன் நாட்டுக.

✦ கன்றுகளுக்கு நிழற்படுத்தவும்.

✦ தேவையான அளவு உரமிடவும்.

*அட்டவணை:7* **தெரிவு செய்யப்பட்ட ஊடுபயிர்கள்**
**(தென்னையின் வயது அடிப்படையில்)**

| தென்னையின் வயது | வருடாவருடம் | குறுகிய காலம் | எல்லாக்காலமும் |
|---|---|---|---|
| 0-5 வருடங்கள் | இஞ்சி, மஞ்சள், அவரையினப் பயிர்கள், இராசவள்ளி, மரவள்ளி, வத்தாளை, மிளகாய், மரக்கறி வகைகள். | அன்னாசி, கொடித்தோடை, வாழை, பப்பாசி. | — |
| 25-45 வருடங்கள் | இராசவள்ளி, இஞ்சி, மஞ்சள். | — | கொக்கோ, கோப்பி, மிளகு, கடுகு, புல்வளர்ப்பு. |
| 45-60 வருடங்கள் | இராசவள்ளி, இன்னல, வத்தாளை, அவரையினம், மிளகாய், மரக்கறிப் பயிர்கள். | பப்பாசி அன்னாசி, வாழை, கொடித் தோடை. | கறுவா, எலுமிச்சை, வெற்றிலை, புல்வளர்ப்பு, |

✦ பூச்சி, பீடைகள், நோய்களைக் கட்டுப்படுத்தவும்.

**தென்னையின் கீழ் அன்னாசி**

*வர்க்கம்:-* கியூ (CUE), மொறிசியஸ் (MORISIOUS).

*இடைவெளி:-* நிரைகளில் 40 CM

*நடுகைமுறை:-* இரண்டு தென்னை மர வரிசைகளுக்கு இடையில்.

அ) 2 தனி நிரைகள்

ஆ) 3 தனி நிரைகள்

இ) 2 தனி நிரைகளும், ஓர் இரு வரி நிரையும்.

**பசளைப் பாவனை**

NPK - 11:7:31

✦ அடியுரம் மேல் மண்ணுடன் கலத்தல் வேண்டும்.

✦ மேற்கட்டு உரம் வரிசையின் இருபக்கமும் 5 Cm (2") ஆழத்தில் இடுதல் வேண்டும்.

✦ பூப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு, உரப்பிரயோகம் நிறுத்தப்படல் வேண்டும்.

✦ பூத்தல் ஓமோனகளை 11-12 ஆம் மாதத்தில் அடிக்கலாம்.

**அடிக்கட்டுப் பசளை**
**(10,000 கன்றுகளுக்குத் தேவையானவை)**

அமோனியம் சல்பேற் - 220 கிலோ கிராம்.

மியூரியற் ஓவ் பொட்டாசு - 110 கிலோ கிராம்.

*(தொடரும்)*

**ஜெ. சத்தியேந்திரன்**
**என். டீ. ரீ (விவசாயம்)**

உழைப்போம் உயர்வோம்!

தொழில் மலர்

# சுற்றுச் சூழல் மாசடைதலைத் தவிர்க்கும் தூய உற்பத்திக் கைத்தொழில் முறைமை

*(சென்றவாரத்தொடர்ச்சி...)*

☆ சுற்றாடல் மாசுபாடு என்பது தொடர்ச்சியாக உற்பத்தியில் நிலவுகின்ற வினைத்திறமையின்மையின் விளைவேயாகும். இத்தகைய உற்பத்தியை மிகவும் வினைத்திறமையுடையதாக மேற்கொள்ள முடியுமென்பதோடு, கழிவுப்பொருள் வெளியேற்றத்தையும் குறைத்துக்கொள்ள முடியும். இவ்வேளையில் தொழில் முயற்சியின் இலாபம் அதிகரிக்கும்.


☆ எந்தவொரு வினைத்திறமையற்ற உற்பத்தியினூடாகவும் அளவுக்குகதிகமான இயற்கை வளங்கள் பயன்படுத்தப்படும். இதன் காரணமாக அதிக அளவில் இயற்கை வளங்கள் அழிவடைந்துவருவதுடன், நிகழ்கால மற்றும் எதிர்காலச் சந்ததியினரது வாழ்க்கை முறைக்கும், வாழ்க்கைத்தரத்திற்கும் இது அச்சுறுத்தலாக அமையும் (நீரும், காடுகளும் அகற்றப்படுதல் இதற்குத்தக்க உதாரணமாகும்).

☆ தூய உற்பத்தி என்பது உற்பத்தியை மிகவும் பயனுறுதிமிக்கதாக அமைப்பதற்கான ஆரம்பப்படிநிலையாக அமைவதோடு, இதன்மூலமாகச் சுற்றாடல் மாசுபாடு தடுக்கப்படுகின்றது. இது மாசுபாட்டுக் காரணிகள் உருவாகிய பின்னர் அவற்றுக்கான தீர்வுகளைக் காணும் முறையினைப் பார்க்கிலும் வித்தியாசமானது.

☆ தூய உற்பத்தியானது வினைத்திறன் மற்றும் சுற்றாடல் பாதிப்பு ஆகிய இரு செயற்பாடுகளிலும் ஒரேநேரத்தில் ஈடுபடுகின்ற வழிமுறையாகும்.

☆ பெரும்பாலான தூய உற்பத்திகள் எந்தவொரு பணச்செலவுமின்றி மேற்கொள்ளப்படலாம் அல்லது மிகக்குறைந்த பணத்தொகையே செலவாகும். இது பொதுவாகத் தொழில் முயற்சிகளைப் பொறுத்தவரையில் இலாபகரமானதாகும்.

☆ சுற்றாடல் மாசடைவதால் பொதுமக்கள் சுமக்க நேரிடுகின்ற செலவுகள் பற்றியும், தொழில் முயற்சிகளை வினைத்திறன் மிக்க வகையில் பேணிவருதல் பற்றியும் பிறரது அறிவினை மேம்படுத்த தனிப்பட்ட முறையில் குடிமக்களாலும், மக்கள் அமைப்புக்களாலும் இயலும். குறிப்பாகச் சிறிய தொழில் முயற்சியாளர்களுக்கு இது பற்றி விளக்கமளிக்க இவர்களால் இயலுமானதாக அமையும்.



**தூய உற்பத்தியின்**
**பெறுபேறுகள் யாவை?**

உலகின் பல நாடுகளில் தூய உற்பத்திச் செயல்முறை நடைமுறையிலுள்ளது. இலங்கையிலும் இவ்வழிமுறையைப் பின்பற்றி வெற்றிகரமான பெறுபேறுகளைப் பெற்ற பல தொழில் முயற்சிகள் உள்ளன. இது சம்பந்தமானதொரு சில உதாரணங்கள் பின்வருமாறு:

☆ பிரசித்திபெற்ற ஒரு குளிர்பானக் கம்பனியின் போத்தல்கள் சுத்திகரிக்கப்படும் இயந்திரசாலையில் பாவிக்கப்படுகின்ற கோஸ்ரிக் சோடா அதன்பின்னர் அகற்றப்பட்டது. தூய உற்பத்திமுறையின் கீழ் அவற்றை மீண்டும் பாவனைக்கு எடுப்பதற்கான வேலைத்திட்டமொன்று முன்வைக்கப்பட்டது. ஓராண்டில் இவ்வாறு சேகரிக்கப்பட்ட கோஸ்ரிக் சோடாவின் பெறுமதி ரூ. 22 லட்சமாகும்.

☆ நூடில்ஸ் உற்பத்திக் கம்பனியொன்றில் தயாரிக்கப்படுகின்ற நூடில்ஸை உலர்த்துவதற்காக நீராவி பயன்படுத்தப்பட்டது. இவ்வாறு பயன்படுத்தப்படுகின்ற நீராவியின் அமுக்கம் சதுர அங்குலத்திற்கு 80 இறாத்தல்களாக அமைந்தது. ஆயினும், இதற்குத் தேவையான முறையான அமுக்கம் 25 ச.அ. இறாத்தல்களென தூய உற்பத்திச் செயல்முறையினூடாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அதற்கு முன்னர் விரயமாகிய நீராவியின் அளவு மிக அதிகமாகும்.

☆ கோப்பித்தூள் தயாரிக்கும் ஆலையொன்றில் எதிர்பார்த்த அளவைவிட முடிவுத்தொகை குறைவாக அமைந்தது. தொழிலாளர்கள் திருடுவதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டமையால் தொழிற்பிணக்கு உருவாகக் காரணமாயிற்று. தூய உற்பத்திமுறையைக் கையாண்டவேளையில் கோப்பி பொதிசெய்யும் கருவியின் கோளாறு காரணமாக- 10 மற்றும் 20 கிறாம் எடையுள்ள பக்கெட்டுகளில் ஒரு கிறாமோ, இரண்டு கிறாமோ அதிகமாக அடங்கியுள்ளமை புலனாகியது. இதனைச் சரி செய்தமையால் தொழில் முயற்சி இயல்பு நிலைக்கு வந்தது.


☆ கண்ணாடி ஆலையொன்றில் சக்திப் பாவனை தொடர்பில் தூய உற்பத்தி முறை கடைப்பிடிக்கப்பட்டது. பயன்படுத்துகின்ற பல அமுக்க வாயுக்குழாய்கள் கசிவுடையனவாகக் காணப்பட்டமை அதன் மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாறு விரயமாகிய வாயுவை உற்பத்தி செய்ய ஆலையின் மொத்த மின்சாரப்பட்டியலில் 40% செலவாகியிருந்தது.

☆ ஏற்றுமதிக்காகத் தேங்காய் பதப்படுத்தும் ஆலையொன்றில் அதிகளவில் நீர் பாவிக்கப்பட்டது. ஆலையில் தூய உற்பத்தி முறை பயன்படுத்தப்பட்டது. அங்கு அதுவரை சுத்திகரிப்பு வேலைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட ஓர் அங்குல இறப்பர் குழாய்க்குப் பதிலாக, அரை அங்குலக் குழாய் அறிமுகஞ்செய்யப்பட்டது. இதன் விளைவாக ஆலையின் நீர்ப்பாவனை 60% ஆல் குறைவடைந்தது.

*(தொடரும்)*

**தருவது:**
**வர்த்தகக் கைத்தொழில்**
**சம்மேளனம்.**

# காடைக்கோழி உற்பத்தி குடாநாட்டில் சாத்தியமா?



காடைக்கோழியைப் பற்றி இன்றுவரை தெரியாதவர்கள் பலர் உள்ளனர். இதனால் அதன் வளர்ப்பிற்கான சாத்தியத்தன்மையை ஆராயமுன், அதன் வரலாற்றை ஓரளவு தெரிவது சாலச்சிறந்ததாகும். காடை இனத்தில் பலவகைகள் உள்ளபோதிலும், இக்கட்டுரையானது JAPANESE QUAIL (COTURNIX IAPONICA) ஐ மையமாக வைத்து வரையப்படுகிறது. இவ்வினமானது அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஆய்வுகூட பரிசோதனைகளுக்காக வளர்க்கப்படுகின்றது. ஏனெனில்- சிறிய உடற்பருமனையும், கூடியளவு இனப்பெருக்கும் ஆற்றலையும், குறுகிய வாழ்க்கை வட்டத்தையும் கொண்டிருப்பதால் பிறப்புரிமையியல் ரீதியிலான பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு மிகவும் இலகுவாக இருக்கிறது.

இவை சிறிய கூடுகளில் வளர்க்கப்படுகிறது. பலர் காடைக்கோழி என்றால் பெரிதாக இருக்கும் என நினைக்கிறார்கள். உண்மையில் இது 'LOVE BIRDS' போல உருவத்தில் சிறியவை. இன்னும் நம்ப முடியவில்லையாயின், 3 mx6 m (10 அடி x 20 அடி) இடைவெளியில் 900 காடைகளை வளர்க்கலாம். என்ன ஆச்சரியமாக இருக்கிறதா?

இவற்றை வளர்க்கும்போது கூடுகளுக்கு அடியில்போடும் மரத்தூள்களோ அல்லது உமியோ மிகவும் உலர்ந்த நிலையில் இருத்தல் அவசியம். ஏனெனில், இவைதான் ஈற்றில் நோய் பரவுவதற்கு வழிசமைக்கும். எனினும் சிறந்த பராமரிப்பும், தூய்மையும் இவற்றில் நோய்பரவும் ஆற்றலை பெருமளவில் கட்டுப்படுத்தும்.

சாதாரண கோழிகளிற்குப் போடும் உணவே இவற்றிற்கு வழங்கலாம். எனினும் நீர் வைக்கும் உபகரணத்தில் நீரை நிறைக்கும்போது மிகவும் கவனம் தேவை. ஏனெனில், சாதாரண ஒரு கோழி, அதாவது 2-2.5 kg நிறையுடைய கோழியினது 1-2 கிழமை வயதுடைய குஞ்சானது ஏறத்தாழ 50 g மட்டும் இருக்கும். எனவே 250 g நிறையுடைய காடையின் குஞ்சானது என்ன நிறையுடையதாக இருக்கும்? அதன் பருமன் எவ்வாறு இருக்கும்? உங்கள் மனக்கண்முன் சற்று நிறுத்திப் பாருங்களேன். ஆகவே, இத்தகைய குஞ்சுகள் நீர் பருகும்போது தப்பித்தவறி நீர் வைக்கும் உபகரணத்தினுள் விழுந்தால் அதன் கதி அதோ கதிதான். ஆகவே, இதைத் தடுப்பதற்காக நீர் வைக்கும் உபகரணத்தில் மிகக்குறைந்தளவு நீரை எடுத்து, அதன் மட்டத்தை அதிகரிப்பதற்காகக் கண்ணாடியிலான மாபிள்கள் அதனுள் இடப்பட்டு நீர்மட்டம் அதிகரிக்கப்படும். அதாவது, நாம் சிறுவயதில் படித்த "காகமும் கூசாவும்" கதை மாதிரி.

சரி. இனி ஓரளவு காடையைப் பற்றி விளங்கியிருக்கும், எனினும், உங்கள் மனதில் சில கேள்விகள் எழக்கூடும். இவ்வாறான உருச்சிறுத்த காடையை ஏன் நாம் வளர்க்க வேண்டும்? இதன் பயன் என்ன? இதை ஏன் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வளர்க்கவேண்டும்? காடை வளர்ப்பை முன்னெடுக்க ஏதாவது முயற்சிகள் எடுக்கப்பட்டதா? இவற்றிற்கான தீர்வுகளைக் கீழ்வரும் பந்திகள் தெளிவாக்கும்.

யாழ். குடாநாடானது - உலர்வலயத்தில் அமைந்துள்ளது. இங்கு வெப்பநிலை வீச்சானது 20°C - 36°C வரையும், சாரீரப்பதனானது 45% - 70% வரையும் செல்கிறது. இது காடையினத்தின் வளர்ச்சிக்கும், விருத்திக்கும் மிகப்பொருத்தமாக இருக்கிறது. குடாநாட்டைப் பொறுத்தவரைக்கும் 3 வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள் வசிக்கிறார்கள். பணக்காரக் குடும்பத்தினர், நடுத்தரவர்க்கத்தினர், வறிய குடும்பத்தினர்.

இங்கு பணக்காரக் குடும்பத்தினர் சாதாரண கோழிகளை வடிவிற்காகவும், அவர்களுடைய நுகர்விற்காகவும்- நடுத்தர வர்க்கத்தினர் நுகர்விற்காக மட்டுமல்லாமல் மேலதிக வருமானத்திற்காகவும் - வறிய குடும்பத்தினர் பிரதானமாக வருமானத்திற்காகவுமே கோழிகளை வளர்க்கிறார்கள்.

| கோழி இனம் | 1வது முட்டையிடும்போது கோழியின் வயது (கிழமைகளில்) | ஒரு வருடகாலத்தில் இடும் முட்டையின் அளவு | அடைகாக்கும் காலப்பகுதி (நாட்களில்) |
|---|---|---|---|
| சாதாரண கோழி | 21 | 310 | 21 |
| வான்கோழி | 32 | 110 | 28 |
| காடை | 5 | 240 | 17 |
| தாரா | 21 | 270 | 28 |

போசணைப் பெறுமதியைப் பார்க்கும்போது காடையின் முட்டைக்கே போசணை அளவு அதிகமாகும்.

| கோழி இனம் | நீர் (%) | புரதம் (%) | கொழுப்பு (%) | காபோவைதரேற்று (%) | கனியுப்புக்கள் (%) |
|---|---|---|---|---|---|
| சாதாரண கோழி | 74.6 | 12.1 | 11.1 | 1.2 | 1.0 |
| வான்கோழி | 72.5 | 12.7 | 11.9 | 1.1 | 0.8 |
| காடை | 74.3 | 13.1 | 11.1 | 1.4 | 1.1 |
| தாரா | 70.8 | 12.8 | 13.8 | 1.4 | 1.2 |

காடைக்கோழிகளின் வாழ்க்கை வட்டத்தைப் பார்க்கையில் - இவை சாதாரண கோழிகளிலும் பார்க்க மிகவிரைவாக முட்டையை இடுகின்றன.

எனினும், இதன் முட்டையினது பருமன், நிறை (13 g) என்பவை சாதாரண கோழியிலும் பார்க்க குறைவாகவே உள்ளது. அதிகளவு மக்கள் என்ன பொருளாக இருந்தாலும் அதன் வடிவமும், பருமனும் பெரிதாகவிருந்தால் அதிக ஆர்வமாக அதை வாங்குவார்கள். இதனால், காடைக் கோழியின் முட்டை- பருமன் மிகவும் சிறிதாக இருப்பதால், நுகர்வோரின் ஆர்வம் மிகவும் குறைவாகவே உள்ளது. எனினும், 1995 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட 'கிருஸ்ணா பாமினது' தரவுகள் சாதாரண கோழி முட்டை 5/- ஆக விற்றபோது, காடையினது முட்டை 3/- இற்கு விற்கக்கூடியதாக இருந்ததாகச் சான்றுபகர்கிறது.

எனவே, சாதாரண நுகர்விற்கும், மேலதிக வருமானத்திற்கும், அழகிற்காகவும் கோழி வளர்ப்பவர்களாகிய செல்வந்தர்களும், நடுத்தர வர்க்கத்தினரும் முதலில் தாம் வளர்க்கும் சாதாரண கோழியினது எண்ணிக்கையை ஓரளவு குறைத்து, காடையை வளர்ப்பதால் கைமேல் பலன் உண்டாகும். பொருத்தமான விவசாய விரிவாக்க செயற்திட்டங்களினாலும், இம்முட்டையினது போசணை சம்பந்தமான கண்காட்சியாலும், சமூகத்தில் இம்முட்டைக்கான கேள்வியை ஓரளவிற்கேனும் அதிகரிக்கச்செய்வதன்மூலம் வறியமக்களும் தமது உற்பத்தியைக் கணிசமானளவு கூட்டக்கூடியதாக இருக்கும்.

வட-கிழக்குப் பொருளாதாரத்தில் சிறந்த புத்திஜீவிகள் வாழும் இடமாக இன்றும் யாழ். நகர் கருதப்படுகிறது. ஆகவே, இங்குள்ள மககளின் நுகர்ச்சியில் ஏற்படும் மாற்றத்தை மற்றைய மாவட்டங்களும் கவனத்திலெடுப்பதால், ஏனைய மாவட்ட மக்களும் இதை 'லபக்' எனப் பிடித்துக்கொள்வார்கள்.

காடையினது அடைகாக்கும் காலம், பராமரிப்புச் செலவு, கூடமைக்கும் செலவு, தீனிக்கான செலவு (25 g/ நாள்) என்பன சாதாரண கோழியுடன் ஒப்பிடும்போது மிகமிகக் குறைவாகவே உள்ளது.

காடையினது பெற்றோர் இனம், யாழ். குடாநாட்டில் இல்லை. இதைத் தென்பகுதியிலிருந்துதான் கொண்டுவரவேண்டும். முன்புதான் போக்குவரத்துப் பிரச்சினை என்று நொண்டிப்போக்கான சாட்டுச் சொன்னாலும், தற்போதைய சமாதான சூழ்நிலையில் இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்து தேவைக்கேற்ப காடைகளின் பெற்றோர் இனங்கள் வந்து சேருமல்லவா?

சரி, யாழ். குடாவிற்கு இது பொருத்தம் எனவும், பெற்றோர் இனம் வந்து சேர்ந்துவிட்டதாகவும் கருதினால், அடுத்து ஒரு பிரச்சினை. சந்தை வாய்ப்பு எவ்வாறு இருக்கும்? இதற்கு எமக்குப் பண்டைய அனுபவங்கள் கைகொடுக்கின்றன. ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்திற்குப் புறோயிலர் இனம் வந்தபோது, அதன் சந்தை வாய்ப்பு மிகவும் குறைவாகவே இருந்தது. ஏனெனில், அதன் இறைச்சி மென்மையாகவும், சுவையற்றதாகவும் இருப்பதாகக் கருதப்பட்டது. எனினும், காலப்போக்கில் எது புறோயிலரினது விரும்பத்தகாததாக இருந்ததோ, அதுவே தற்போது விரும்பப்படுகிறது. சிறுவர் முதல் முதியவர்கள் வரை விரும்பிப் புறோயிலரை உண்கின்றார்கள். எனவே, காடையினது சந்தை வாய்ப்பு (முட்டையினது) உடனடியாகச் சாத்தியப்படாதுவிடினும், குறிப்பிட்ட வருடங்களுக்குள் அதில் பாரிய முன்னேற்றம் ஏற்படலாம்.

இவ்வளவு இருந்தபோதிலும், இதை மேற்பார்வை செய்து ஊக்குவிக்க ஆட்கள் இல்லாவிடின், இதன் உற்பத்தி அம்போதான். 1995 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமானது பல உள்ளூர் உற்பத்திகளைத் தொடர்ச்சியாக ஊக்குவித்தது. இதனால் யாழ்.குடா குறுகியகாலத்தில் உள்ளூர் உற்பத்தி வளத்தில் வீறுநடைபோட ஆரம்பித்தது.

ஆனால், 1995 இற்குப் பின் நிலைமை மாறி, உள்ளூர் வளங்கள் திட்டமிடப்பட்டு அழிக்கப்பட்டுவருகின்றமை கவலைக்குரிய விடயமாகும். ✷

ஈ. சற்குணன்,
2 ஆம் வருடம், விவசாயபீடம்.

# வன்னிப் பிரதேசத்தில் கால்நடை அபிவிருத்தி


*(சென்றவாரத்தொடர்ச்சி...)*

மார்கழி, தை மாதங்களில் கன்று ஈனுதலைத் திட்டமிடுவதற்கான காரணங்களாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

1. பெரும்போக மழையைத் தொடர்ந்து வரும் காலப்பகுதிகளில் மிகையான புற்களின் வளர்ச்சியூடாக உயர்போசணை கிடைப்பதால் கருத்தரிப்பு வீதம் அதிகரிக்க ஏதுவாகின்றது.

2. வேட்கைக்கான அறிகுறிகள் விற்றமின் ஏ சத்து அடங்கிய உயர்போசணையினால் தெளிவாக வெளிப்படுத்தப்படும்.

இக்காரணிகளை மையமாக வைத்து புரொஸ்திரோகிளாண்டின் (PROSTEROGLANDIN) பயன்படுத்திப் பெரும்பாலான விலங்குகளை தை, மாசி மாதங்களில் வேட்கை ஒருமுகப்படுத்தலுக்குட்படுத்தி திட்டமிட்ட இனவிருத்திக்கு மேற்கொள்வது வன்னிப் பிரதேசத்துக் கால்நடைகளைத் தரமுயர்த்துவதற்குச் சிறந்த வழியமைக்கும்.



தொழிற்படும் நிலையிலுள்ள மஞ்சள் சடலத்தை தொழில்நுட்ப உத்தி மூலமாகப் புரொஸ்திரோகிளாண்டினைப் பயன்படுத்திச் சிதைவடையச் செய்யப்படுகின்றது. அத்துடன் சரியாக இனங்காணமுடியாத பட்சத்தில்- புரொஸ்திரோகிளான்டின் ஒருமுறை ஊசிமூலம் ஏற்றப்படுவதிலும் பார்க்க இரு தடவைகள் ஏற்றப்படுதல் மிகவும் சிறந்ததாகக் கருதப்படுகின்றது. இதன் மூலம் எல்லா விலங்குகளையும் ஒரேநேரத்தில் வேட்கைக்குக் கொண்டுவரமுடியும். புரொஸ்திரோகிளான்டின் பாவனையானது சரியான நேரத்தில் வேட்கையை இனங்காணலில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதுடன், பண்ணையாளரை வேட்கைக்கான அறிகுறிகளைக் கண்டறிவதற்கும், பயிற்றவும் உதவுகின்றது. சினைப்படுத்தலின் பின்னர் எல்லா விலங்குகளும் கருத்தரிப்பதை உறுதிப்படுத்தவேண்டும். இதற்காக எல்லா விலங்குகளும் சினைப்படுத்தி 60 நாட்களின் பின்னர் கருத்தரிப்புப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

பேராசிரியர் அ.நவரத்தினராஜா,
தலைவர், விலங்கு விஞ்ஞானத்துறை
விவசாய பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

இத்திட்டத்திற்குச் சகல கருத்தரியாத வேட்கை வட்டத்திற்கு உட்படுகின்ற விலங்குகள் தெரிவுசெய்யப்படுகின்றன. தெரிவு செய்யப்பட்ட விலங்குகள் - குறிசுடுவதன் மூலம் அல்லது காதில் அடையாளம் இடுவதன் மூலம் அடையாளம் காணப்படுகின்றன. ✦

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சாவகச்சேரி | மருதனார்மடம் | சுன்னாகம் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி | ஊர்காவற்றுறை |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 40/- | 30/- | 35/- | 40/- | 40/- | 40/- | 50/- |
| உருளைக்கிழங்கு | 100/- | 70/- | 70/- | 90/- | 90/- | 85/- | 80/- |
| கத்தரிக்காய் | 20/- | 15/- | 20/- | 25/- | 30/- | 20/- | 30/- |
| பாகற்காய் | 40/- | 25/- | 30/- | 40/- | 50/- | 40/- | 50/- |
| வெண்டைக்காய் | 40/- | 15/- | 15/- | 35/- | 30/- | 30/- | 20/- |
| முருங்கக்காய் | 140/- | 120/- | 200/- | 150/- | ✷ | ✷ | ✷ |
| கரட் | 60/- | 40/- | 40/- | 60/- | 60/- | 60/- | 50/- |
| பீற்றூட் | 40/- | 30/- | 30/- | 40/- | 30/- | 25/- | 40/- |
| வெங்காயம் | 30/- | 20/- | 20/- | 25/- | 25/- | 25/- | 30/- |
| பச்சைமிளகாய் | 40/- | 30/- | 35/- | 35/- | 50/- | 50/- | 25/- |

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு.
- திருக்குறள் -

# நமது நோக்கு

## ஹெக்கோன் கொழும்பில் எதிரொலிக்குமா?

போர் நிறுத்தத்தைச் செம்மையாக்குவதற்கும், முரண்பாடுகள் - பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்வதற்கும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கான அதிகாரம் கூடுதலாக்கப்பட வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு - அரசாங்கத்தரப்பு ஹெக்கோன் பேச்சுக்களில் சம்மதம் தெரிவித்திருக்கிறது.

இதனடிப்படையில் - கடற்பிரதேசத்தில் நடக்கக்கூடிய சம்பவங்கள், யுத்தநிறுத்த மீறல்களைக் கண்காணிப்புக் குழுவே விசாரித்து, அவர்களாகவே முடிவெடுக்கும்படி - இருதரப்புமாக இணைந்து, கண்காணிப்புக் குழுவிற்கு அதிகாரமளிப்பது என்ற இணக்கம் எட்டப்பட்டிருக்கிறது.

இந்த இணக்கமானது - போர் நிறுத்தம் ஆரம்பித்தது முதலாக - கடற்பிராந்தியத்தில் தன்னிச்சையாக அடாவடித்தனம் புரிந்துவரும் கடற்படையின் எல்லைமீறிய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் என்றே நம்பப்படுகிறது.

குறிப்பாக திருகோணமலைக்குக் கிழக்கே, சர்வதேசக் கடற்பரப்பில் - விடுதலைப் புலிகளின் சர்வதேசக் கப்பலை - இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு - யுத்தநிறுத்தத்தை மீறியும், சர்வதேச கடல் விவகார நெறிமுறைகளை மதிக்காமலும் - கடற்படை தாக்கியழித்த சம்பவத்திற்குப் பின்னர்- கண்காணிப்புக் குழுவின் பங்கும் பணியும் பற்றிய சந்தேகங்களுக்கும், விளக்கமின்மைக்கும் முற்றுப்புள்ளி வைப்பதாக - ஜப்பானில் ஒரு முடிவு எட்டப்பட்டுள்ளமை மகிழ்ச்சி தரக்கூடியதாகும்.

கண்காணிப்புக் குழுவின் பிரசன்னம் இல்லாமல் - வேண்டுமென்றே, புலிகளின் சரக்குக் கப்பலை வலிந்து இடைமறித்து - கடற்படை நடாத்திய அட்டகாசம் போன்று, இனியும் எதிர்காலத்தில் நடக்காதவாறு பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடன் - விடுதலைப் புலிகளும், அரசாங்கமும், கண்காணிப்புக் குழுவும் இணைந்து, இன்னும் மூன்று வாரங்களுக்குள் நடாத்தப்படவுள்ள சந்திப்பொன்றில் இது தொடர்பாக மேலதிக விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

கடலில் என்று மட்டுமல்லாது - தரையிலும் தற்போது நடைபெற்றுவரும் கைதுகள், தடுத்து வைப்புக்கள் தொடர்பாக - இரண்டு தரப்பும் ஒரு இணக்கத்திற்கு வந்திருப்பதும் முக்கியமானதொரு விடயமாகின்றது.

போராளிகளைக் கைது செய்து, அவர்களை நீதிமன்றங்களுக்கு கொண்டு செல்லும் படையினரின் தற்போதைய போக்கை மாற்றி - இந்த விவகாரத்தை கண்காணிப்புக்குழுவே கையாள வேண்டுமென, விடுதலைப் புலிகள் முன்வைத்த வேண்டுகோளும் அரச தரப்பில் ஏற்கப்பட்டிருக்கிறது. இதைப்போல, படையினர் கைதாகும் சந்தர்ப்பங்களும் கையாளப்பட வேண்டுமென, அரச தரப்பின் கோரிக்கையும் புலிகளால் ஏற்கப்பட்டது.

பேச்சுக்களின் முதற்கட்டத்திலேயே ஏற்பட்ட இந்த இணக்கப்பாடுகள் - பேச்சுக்கள் சுமுகமாகத் தொடர்வதற்கான வழியைச் சமைத்துக் கொடுத்திருப்பதோடு, அமைதி முயற்சிகள் தொடரப்படும் நம்பிக்கையையும் தர ஆரம்பித்துள்ளன.

இந்த நம்பிக்கையைக் கட்டிக்காக்க வேண்டிய பெரும் பொறுப்பு - வாக்குறுதிகளையும், உறுதிப்பாட்டையும் வழங்கியிருக்கும் அரசாங்கத்தைச் சார்ந்திருப்பதோடு-

அமைதியை உறுதிப்படுத்தவும், படையினரைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும் - அரசாங்கம் என்ன செய்யப் போகிறது என்ற எதிர்பார்ப்பையும் அனைவரிடத்திலும் தோற்றுவித்துள்ளது.

ஆனாலும் -

கண்காணிப்புக் குழுவுக்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டதும் - அதனை நடைமுறைச் சாத்தியமானதாக மாற்றிக்கொள்வதில் கடற்படைக்குள்ள பொறுப்பும்,

கண்காணிப்புக்குழுவின் விதிமுறைகளை அல்லது போர்நிறுத்த ஒழுங்குகளை கடற்படை எவ்வாறு மதிக்கப் போகின்றது என்பதும் முக்கிய வினாக்களாகவேயுள்ளன.

ஹெக்கோனில் - கடற்பிரதேசத்தில் போர்நிறுத்த விதிமுறைகள் தொடர்பாக உடன்பாடு ஒன்று எட்டப்பட்டதும் - கடற்படை தரப்பிலிருந்து அதற்கு எதிர்ப்புக் கிளம்பியிருப்பதான செய்தி - கடற்படையை, போர்நிறுத்தத்திற்கேற்ப வழிக்குக் கொண்டு வருவதிலுள்ள சிரமங்களையே 'எடுத்துக் காட்டுகின்றது.

அதேவேளை - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தன்னிச்சையான போக்குகளும் மாற்றம் கண்டுவிடும் என்று நினைப்பதற்கும் இல்லை.

எனவே - விடுதலைப் புலிகளும் அரசாங்கமும், கண்காணிப்புக் குழுவும் சேர்ந்து போர்நிறுத்தத்தை வலுப்படுத்துவதற்கு எடுக்கும் முடிவுகளுக்கு இசைவாகப் படையினரையும், ஜனாதிபதியையும் நடந்து கொள்ளச்செய்வதற்கு சர்வதேச ரீதியாகவும் வலுவான அழுத்தம் கொடுக்கப்படவேண்டியது அவசியமாகின்றது.

ஹெக்கோனில் தெரிந்த இணக்கம் - களத்தில் எதிரொலிக்கும் வரை, அதற்கான ஆவனவற்றை அரசாங்கம் மேற்கொள்ளும்வரை, படையினரும் அமைதி முயற்சிகளில் விசுவாசத்துடன் செயற்படும் வரை - இந்த எதிர்பார்ப்பு முழுமை பெறாது என்பதே உண்மையாகும்.

# சிறானின் எதிர்கால செயற்பாடுகளை ஆராய 8 அரச அதிபர்கள் கிளிநொச்சியில் கூடினர்!

## நாளைமறுதினம்வரை மாநாடு நடக்கிறது

சிறானின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்த செயலமர்வு நேற்று முன்தினம் கிளிநொச்சியில் ஆரம்பமானது.

நேற்றுமாலை 3 மணியளவில் ஆரம்பமான இச்செயலமர்வில் வட- கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த அரசாங்க அதிபர்களும் மற்றும் திணைக்களத் தலைவர்கள், மாநகரசபை ஆணையாளர்கள், திட்டப் பணிப்பாளர்கள் நிர்வாக உத்தியோகத்தர்களென நூற்றியிருபது பேர் பங்கு பற்றுகின்றனர்.

நாளைமறுதினம்வரை நடைபெறும் இச்செயலமர்வில் சிறானின் செயற்பாடுகள் தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும்.

சிறான் பணிப்பாளர் செல்வின் இரேனியஸ் தலைமையில் நடைபெறும் இச்செயலமர்வில்- சிறான் பிரதிப் பணிப்பாளர்கள் இருவர் மற்றும் சிறான் பிரதிநிதிகளும் பங்குபற்றுகின்றனர்.

# ஒரே கேள்வி கேட்டு தொல்லைப்படுத்தாதீர்

## செய்தியாளர் மீது ஹக்கீம் பாய்ச்சல்

"ஐந்து சுற்றுப்பேச்சுக்களுக்குச் சென்றபோதும், அரசதரப்புப் பிரதிநிதியாகச் செல்கின்றீர்களா? முஸ்லிம்களின் பிரதிநிதிகளாகச் செல்கின்றீர்களா? என்று தான் கேள்வி கேட்கிறீர்கள். திரும்பத்திரும்ப இதேகேள்வியைக் கேட்டுத் தொல்லைப்படுத்தாதீர்கள்" - என்று செய்தியாளர்களிடம் சினந்துகொண்டார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து ரோக்கியோவுக்குப் புறப்பட முன்னர், செயதியாளர்கள் அவரிடம் - இம்முறை அரசதரப்புப் பிரதிநிதியாகவா, முஸ்லிம்களின் பிரதிநிதியாகவா பேச்சுக்குச் செல்கிறீர்கள் எனக்கேட்டனர்.

இதற்குப் பதிலளித்தபோதே ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார். ஜப்பானில் நடக்கும் பேச்சுக்களில் முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஹசன் அலி மற்றும் ஆலோசகர் ஹிஸ்புல்லா ஆகியோருடன் ஹக்கீம் கலந்துகொள்வது குறிப்பிடத்தக்கது.

# தகாத வார்த்தைகளால் நீதிவானை பேசிய இருவர் இணுவிலில் கைது!

## அவமதிப்பு எனக் குற்றச்சாட்டு

(சிறுப்பிட்டி)

நீதிவானை அவமதித்த குற்றத்துக்காகப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இருவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுப் பிணையிற்செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இணுவில் பருத்திக்கடவைப் பிள்ளையார் ஆலய வீதியால்- ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் பி.சுப்பிரமணியம் வாகனத்தில் சென்று கொண்டிருக்கும்போது - வீதிக்குக் குறுக்காகப் புகையிலை ஏற்றிக்கொண்டு நின்ற லான்ட் மாஸ்ரரை விலகி வழிவிட்டுத் தருமாறு - அதன் சாரதியைக் கேட்டார். லான்ட் மாஸ்ரர் சாரதியும், புகையிலை உரிமையாளரும் சேர்ந்து நீதிவானைத் தகாதவார்த்தைகளால் பேசியதற்காகவே இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் கடந்த 17 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது, 20 ஆயிரம் ரூபா காசுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். மீண்டும் இம்மாதம் 28 ஆம் திகதி இவர்களை ஆஜராகும்படி பணிக்கப்பட்டுள்ளது. (78)

# அமைதி முயற்சிகள் வெற்றியளிக்காவிடில் பொருளாதார அபிவிருத்தி சாத்தியமாகாது!

## நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கிசன்

இலங்கையில் அமைதி முயற்சி வெற்றியளிக்காதுபோனால், பொருளாதார அபிவிருத்தி ஏற்படுவது சாத்தியமற்றது என்று நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்தார்.

அண்மையில் இலங்கை வந்திருந்தபோது- எம்பிலிப்பிட்டியவில் இருநூறு மில்லியன் ரூபா செலவிலான அபிவிருத்தித் திட்டமொன்றுக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னரே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைதி முயற்சியும், பொருளாதார அபிவிருத்தியும் நாணயத்தின் இருபக்கம் போன்று இலங்கைக்கு முக்கியமானவை. அமைதி முயற்சி மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பவற்றில் நோர்வே இலங்கைக்குப் பூரணமான ஆதரவையும், உதவிகளையும் வழங்கத் தயாராகவுள்ளது என்றும் விதார் ஹெல்கிசன் மேலும் தெரிவித்தார்.

# மண்கும்பானில் 35 வீடுகளை ஜி.ரி.இசற் அமைக்கும்

(மண்கும்பான்)

வன்னியிலிருந்து வந்து மண்கும்பான் பகுதியில் மீளக்குடியமர்ந்த குடும்பங்கள் மற்றும் கணவனை இழந்த குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்க ஜீ.ரி.இசற் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக 35 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. வன்னியிலிருந்து வந்து தற்காலிக குடிசைகள் அமைத்து தங்கியுள்ள தமக்கு வீடமைப்பு வசதி செய்துதர இந்நிறுவனம் எடுத்துள்ள நடவடிக்கை குறித்து அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (53)

# இத்தாலி சென்ற படகை கைப்பற்றுமாறு தகவல்!

## இலங்கை அரசு அனுப்பியது

திக்வெல்லைக் கடற்கரையிலிருந்து இத்தாலி நோக்கிப் புறப்பட்ட படகு ஒன்றைக் கைப்பற்றுமாறு, இலங்கை அரசாங்கம் இத்தாலிக்குத் தகவல் அனுப்பியுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி திக்வெல்லைக் கடற்கரையிலிருந்து இப்படகு 66 பேரை ஏற்றிக்கொண்டு புறப்பட்டதாகவும், இந்தத் தகவல் தாமதமாகவே பொலிஸாருக்குக் கிடைத்ததால், அப்படகைக் கைப்பற்றுமாறு இத்தாலி அதிகாரிகளிடம் அரசு கோரியுள்ளது.

# மீண்டும் இயங்கிவரும் நெடுந்தீவு மத்திய சந்தை

நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினரின் வருகையையடுத்தே மக்களால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்ட மற்றும் உண்ணாவிரதப் போராட்டங்களினால் - செயலிழந்திருந்த நெடுந்தீவு மத்திய சந்தை, சந்தைக் கட்டடத் தொகுதிகள் என்பன கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் இயங்க ஆரம்பித்துள்ளன.

அத்துடன், நெடுந்தீவுப் பிரதேசசபைக் கட்டடத்தில் கடற்படையினர் தொடர்ந்தும் நிலை கொண்டுள்ளதால் - பிரதேச சபைப் பணிகள் யாவும் பிரதேசசபை பொதுநூலகம் மற்றும் ஊழியர் தங்குமிட விடுதி ஆகியவற்றில் தற்காலிகமாக நடந்து வருகின்றன. (113)

# அரச அலுவலகங்களில் நவீன தொழில்நுட்ப வசதிகள்

## பயன்படுத்துமாறு அமைச்சர் கோரிக்கை

அரசாங்க நிர்வாகத்துறைகள் மறுசீரமைக்கப்பட்டு, நவீன வசதிகள் உருவாக்கப்படவேண்டும் என்று பொது நிர்வாக அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரச அலுவகங்களுக்கு நவீன வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டபோதும், அது குறித்து அதிகாரிகள் அக்கறையற்றிருப்பதாகவும், பொதுமக்களுக்குத் துரிதமான சேவையை வழங்கவும், கோவைகளை ஆவணப்படுத்தவும் நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கைக்கான எரிபொருள் விநியோகம்; இந்திய நிறுவனம் அதிகரிக்கத் திட்டம்!

## மங்களூரிலிருந்து எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை

(கொழும்பு)

இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் இலங்கைக்கு 2 லட்சத்து 40 ஆயிரம் தொன் எரிபொருளை விற்பனை செய்வதற்குத் தீர்மானித்துள்ளது.

மங்களூரில் உள்ள எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து இந்த எரிபொருள் விநியோகிக்கப்படும். கப்பல் மூலம் எரிபொருளை மங்களூரிலிருந்து கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் இந்த எரிபொருள் ஏற்றுமதி அளவை 15 லட்சம் தொன்னாக அதிகரிப்பதற்கும் இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

முன்னதாக 30 ஆயிரம் தொன் டீசலையும், 10 ஆயிரம் தொன் ஏனைய எரிபொருளை வழங்குவதற்குமான 13 கோடி டொலர் ஒப்பந்தத்தில் இந்திய எண்ணெய்க் கூட்டுத்தானம் கைச்சாத்திட்டிருந்தது. இந்த ஒப்பந்தம் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் நடைமுறைக்கு வந்தது குறிப்பிடத்தக்கது.

# நாம் என்றைக்குமே இலங்கை மீனவர்களுடன் இணைந்து தொழில் செய்யவே விரும்புகிறோம்

**கச்சதீவு உற்சவத்துக்கு வந்த தமிழகத்தைச் சேர்ந்த மீனவர் தலைவர்களுடனான நேர்காணல்.**



**T.பொஸ்கோ**
*(தலைவர், பரவர் நலப்பேரவை, பாம்பன்)*


**கேள்வி:** எல்லை தாண்டி மீன் பிடிப்பதன் மூலம் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** எங்கள் நாட்டில் அரசானது வாரத்தில் 3 நாட்கள் தொழில் செய்ய அனுமதி வழங்கியுள்ளது. அதேபோல இலங்கை அரசும், இலங்கை மீனவருக்கு ஏற்றதாக 5 பாகத்துக்கு மேல் பகுதியில்தான் இந்திய மீனவர்கள் வந்து தொழில் செய்யலாம் என்று ஒரு முடிவு எடுத்தால், இப்பிரச்சினை வராது. அத்தோடு இந்திய- இலங்கை அரசுகள் சேர்ந்து பேசித் தொழிலை ஒருமுகப்படுத்தி, இரு நாடுகளும் இன்னென்ன நாட்களில் மாறி மாறி தொழில் செய்யலாம் என்று கூறி, இந்திய மீனவர்களுக்கும் ஒரு தொழில்முறையை ஏற்படுத்திக் கொடுத்தால் நல்லது. இப்படி இருந்தால் எந்தப் பிரச்சினையும் வராது. ஏனென்றால், எமது நாட்டில் பெருந்தொகையான படகுகளும், ஏராளமான மீனவர் குடும்பங்களும் காத்துக் கிடக்கின்றன.

**கேள்வி:** அண்மையில் மன்னார் பகுதியில உங்கள் படகுகள் இலங்கை மீனவர்களால் தடுக்கப்பட்டதே. இது தொடர்பாக உங்கள் மத்தியில் என்ன மாதிரியான உணர்வலைகள் தோன்றின?

**பதில்:** இந்தியமக்கள் மத்தியில் பெரிதாகத் தாக்கம் ஏற்படவில்லை. படகுகளைப் பிடித்தது தொடர்பாக வருத்தம் ஏற்பட்டதைத் தவிர, இந்த விடயத்தை மக்கள் பெரிதாக எடுக்கவில்லை. அத்துடன, இதற்கு எதிர்மறையான நடவடிக்கையையுமே- இலங்கை மக்கள் மீது எடுக்கவில்லை. ஏனென்றால், எங்கள் மீனவர்கள் மீதுதான் பிழை இருந்தது. அதனால் என்ன நடந்தாலும் அதனை நாம் அனுபவிக்கத்தான் வேண்டும். அந்தக் குறிப்பிட்ட தினத்தன்று இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவரின் மகன், தங்கள் படகுகள் பிடிபட்ட வேகத்தினால்- இலங்கை அகதிகள் முகாம்களைத் தாக்குவோம் எனப் பேசினார்.

ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை. மனிதநேயப் பிரகாரம் அது மாதிரியாக எதுவும் செய்ய முடியாது. இலங்கை மீனவர்கள் எங்களைப் பிடித்தது மாதிரி, நாங்களும் அவர்களைப் பிடிக்கலாம். ஆனால், அப்படிச்செய்ய மாட்டோம். ஏனெனில், இலங்கைப் பகுதியில்தான் நாங்கள் தொழில் செய்ய வேண்டியிருக்கிறது, எங்கள் பிழைப்பைத் தொடரவேண்டியிருக்கிறது. அதனால், இரு அரசுகளும் பேசிச் சீரானமுறையில் தொழில் செய்ய வழிசெய்யவேண்டும்.



**I.சார்லஸ் லியோன்**
*(படகு உரிமையாளர், முன்னாள் மீனவர் சங்கச் செயலாளர் - பாம்பன்)*

**கேள்வி:** கடந்த 20 வருடங்களாகத் தொழில் எதுவுமின்றிப் பாதிக்கப்பட்டிருந்தவர்கள், தற்போது தொழில்செய்ய வழி பிறந்துள்ள போது, அதிலும் பிரச்சினை என்றால் யாரும் பொறுக்கமாட்டார்கள் தானே! இது தொடர்பாகத் தங்கள் நிலைப்பாடு எவ்வாறு உள்ளது?

**பதில்:** நாங்களும் நலிவடைந்து கிடந்தவர்கள்தான். அதனால், யாரும் தொழில் நல்லா வரும்போது, தங்கட குடும்பத்தைக் காப்பாற்றச் சம்பாதிக்கவேணும் என எண்ணுவாகள். அந்தவேளையில், அதனை யாரும் இடைஞ்சல் செய்தால், அதை என்னால்கூடப் பொறுத்துக் கொள்ளமுடியாது. அதுபோலத்தான் அண்மையில் இலங்கை மீனவர்கள் மேற்கொண்டது சரியா, பிழையா என்ற சர்ச்சையே கிடையாது. சர்ச்சையும் பண்ணக்கூடாது. ஏனெனில், யாரும் ஒரு வேகத்தில் செய்வதுதான். இவ்வாறு அவர்கள் செய்தது சரிதான். ஏனெனில், இதன் பின்புதான் ஒரு பேச்சுக்கு வருவோம்.

இல்லையானால் தொடர்ந்து இப்படியே நாங்கள் தொழில் செய்ய, அவர்கள் நலிவடைந்து போகவேண்டியதுதான். அதனால் தற்போது பிடிபட்ட படகுகளும்,

**நேர்காணல் கண்ணன்**

தொழிலாளர்களும் விடப்பட்டாலும், எங்கள் மீனவர் சங்கமும்- இலங்கையிலுள்ள மீனவர்கள் சங்கமும் பேசி, ஒரு தீர்வு கண்ட பின்னரே நாங்கள் தொழிலுக்குச் செல்வதென முடிவெடுத்திருக்கிறோம். இந்த 31 படகுகளும் பிடிபட முன்னர்- நூற்றுக்கு மேற்பட்ட படகுகளை இலங்கைக் கடற்படை பிடித்து, அடித்துக் கடலில் மூழ்கடித்திருக்கிறார்கள்.

**கேள்வி:** இந்தக் கச்சதீவுத் திருநாளுக்கு மன்னாரிலிருந்து பக்தர்கள் பெரிதாக வரவில்லை. இதற்கு அண்மைக்காலப் பிரச்சினை காரணமாக இருக்கலாமா?

**பதில்:** உண்மையாக நான் கச்சதீவில் வந்திறங்கியதும் என்ன திருநாளுக்கு மக்கள் குறைவாக வந்துள்ளனரே? எனக் கேட்டேன். அத்தோடு, நானும் சிந்தித்தேன். பெரிய நாட்டுக்கு எதிராக ஒரு நடவடிக்கையை எடுத்திட்டமே. அதனால், அவர்கள் இதனையொரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி எதிர்மறையான நடவடிக்கை எடுத்திடுவார்கள் என்றொரு அச்சம் காரணமாகவே அவர்கள் வரவில்லை என உணர்ந்தேன்.

ஆனால், நாங்கள் இதனைச் சிறிய பிரச்சினையாகவே எடுத்தோம். எதிர் நடவடிக்கைக்கு ஆயத்தமாகவுமில்லை. அப்படிச் செய்யப் போவதுமில்லை. ஆனால், இலங்கை மீனவர்களோட எப்படி சுமுகமாகப் பேசலாம், தொடர்ந்து தொழில்செய்ய என்ன செய்யலாம் என்று எங்கள் தலைவர்கள் பேசுகிறார்களே தவிர- திரும்ப அடிப்போம், பிடிப்போம் எனப் பேசவில்லை. எமது சங்கப் பிரதிநிதி ஒருவர் விமானம் மூலம் மன்னாருக்குப் போயுள்ளார். அவர் எப்படியும் பேசுவார்.

அத்தோடு, இலங்கை சிறிய நாடாகையால், மன்னாரில் நடந்த சம்பவம் பெரிய செய்தியாகியது. இந்தியா பெரிய நாடாகையால் - இச்செய்தி சிறிய ஒரு பெட்டிச் செய்திதான். அதனால்தான் இலங்கை மக்கள் மத்தியில் ஒரு அச்சம் குடிகொண்டது. நாங்கள் என்றுமே இலங்கை மீனவரோடு இணைந்து தொழில் செய்யவே விரும்புகிறோம். இதற்காக அவர்களுடன் பேசித்தான் தீர்க்க வேண்டும். இது நீண்டகாலப் பிரச்சினை. உடன்தீர்வு கிடைக்காது. இருநாட்டு மீனவர் சங்கங்களுமே பேசி ஒரு தீர்வு காணவேண்டும். எமது பிழைப்புக்காக எல்லைதாண்ட வேண்டியுள்ளது. இது எமக்கு ஒரு வாழ்வாதாரப் பிரச்சினை. அதனால் பேசிமுடிவு எடுக்கவேண்டும்.



**X. மனோ**
(செயலாளர், மீனவர் இளைஞர் பேரவை - பாம்பன)

**கேள்வி:** இருநாட்டு மீனவர்களிடையேயான பிரச்சினை மற்றும் கடற்படையினரின் அச்சுறுத்தல் தொடர்ந்துவருகிறது. இதற்கு நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கவுள்ளீர்கள்?

**பதில்:** இலங்கையரும், தமிழ் நாட்டவரும் மரபுரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் ஒன்றுபட்டவர்கள். இப்போதுள்ள காலச்சூழ்நிலை காரணமாக இடைவெளியாகியுள்ளது. இருப்பினும், இந்த உறவை நாம் புதுப்பித்து இருநாட்டு கடல் எல்லைகளிலும், இருநாட்டு மீனவர்களும் எந்தவித தடையுமின்றித் தொழில்செய்ய வழி செய்தால்தான் இருவருக்கும் நல்லது. இலங்கை அரசு அண்மையில் கட்டளை ஒன்று போட்டுள்ளது. இலங்கைக் கடல் எல்லைக்குள் மீன்பிடிக்கும் ஏனைய நாட்டுப் படகுகளைப் பிடித்து, நீதிமன்றத்தில் நிறுத்துமாறு.

இதனைப் பார்த்து இந்திய அரசு சும்மா இருக்காது. இராமேஸ்வரத்துக்கும் அப்பால் இந்திய மீனவர்கள் செல்லக்கூடாது எனக் கட்டளை போடும். அதோடு, இலங்கை அரசும் ஒரு எல்லைக்கப்பால் இலங்கை மீனவர்களும் செல்லக்கூடாதெனக் கட்டளைபோடும். இதனால் பாதிக்கப்படுவது இருநாட்டு மீனவர்கள் மட்டும்தான். ஏனெனில், தலைமன்னார் மீனவர்கள்- எங்கள் குரிசல் தீவு, வாலைதீவு போன்ற இடத்தில் தொழில் செய்பவர்கள்.

கடந்த 20 வருஷமாக இலங்கை மீனவர்கள் தொழில் செய்யவில்லை. அதனால், நாம் அங்கு சென்று மீன்பிடிக்கும்போது எவரும் தடுக்கவில்லை. அப்போது செய்தவாறே, இப்போதும் அங்கு சென்று தொழில் செய்தார்கள். ஆனால், அங்கு தற்போதைய நிலைமை சீராகியுள்ளதால், இலங்கை மீனவரும் தொழில் செய்கிறார்கள். எனவேதான் பிரச்சினை வந்தது. அதனால் எங்கள் சங்கங்களுடன், இலங்கையிலுள்ள மீனவர் சங்கங்கள் பேசி ஒரு நல்ல முடிவை எடுக்கலாம். எடுத்தால்தான் இந்த மாதிரியான நிலைமை நீடிக்காது.

அத்துடன், இந்தியா இலங்கைக்கு கச்சதீவை ஒப்படைக்கும்போது, ஒப்பந்தத்தில் எழுதியுள்ளது என்னவெனில்- இந்திய மீனவர்கள்- கச்சதீவில் வலைகள், மீன்கள் காயப்போடவும், களைப்பாறவும், அந்தோனியார் ஆலயத் திருநாளுக்குச் சென்றுவரவும் எந்தவித அனுமதியும் தேவையில்லை என்று. ஆனால், இதை இருநாட்டு அரசுகளுமே சீராக நடைமுறைப்படுத்தவில்லை. ❋

# ஆயுதப் போராட்டத் தோல்வியால் அரசியற்களம் வந்துள்ள ஜே.வி.பி.

(நேற்றைய தொடர்ச்சி...)

✧ ஐக்கிய தேசியக் கட்சி - ஜே.வி. பிக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணி அரசிற்கும் எதிரானது.



ரீல்வின் சில்வா

அதேபோன்ற நிலையிலுள்ள விடுதலைப்புலிகளுடன் - ஐக்கிய தேசியக்கட்சி மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து, ஒருவருட காலம் இலங்கையில் சமாதானமும் ஏற்பட்டுவிட்டது. இக்கூட்டு எதிர்காலத்தில் ஜே.வி.பி, பொ.ஐ.முன்னணி ஆகிய இரு கட்சிகளின் அழிவிற்கு வித்திட வாய்ப்புண்டு என்ற பயம்.

✧ தமது தலைவரான சோமவன்ச அமரசிங்க பிரித்தானியாவிலிருந்து இலங்கைக்கு வந்தபோது வழங்கப்படாத கௌரவமும், பாதுகாப்பும் விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கு- ஐ.தே.கட்சி அரசு வழங்குவது. (அன்ரன் பாலசிங்கம் குடிவரவு, குடியகல்வு அனுமதியின்றி- இரணைமடுக் குளத்தில் வந்திறங்கினார் என்று ஜே.வி.பி குற்றஞ்சாட்டியபோது, மாலைதீவில் வைத்து விசா வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. பின்னர், கட்டுநாயக்கா விமான நிலைய ஓடுபாதையில் வைத்து விசா வழங்கியமை. தற்போது விமான நிலைய வளாகத்திற்குள் அதியுயர் முக்கியஸ்தர் அந்தஸ்து (V.I.P) வழங்கிக் கௌரவிப்பது) இவ்வாறான தமக்கு விருப்பமில்லாத விடயங்கள் எல்லாவற்றையும்- சிங்கள மக்களின் விருப்பமின்மையாகக்காட்ட முனைகிறது ஜே.வி.பி.

சென்றவாரம் கொழும்பில் இடம்பெற்ற அரச எதிர்ப்புப் பேரணியில் ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட



ஜே.வி.பியின் பிரசார மேடையொன்று

சிங்கள மக்கள் கலந்துகொள்வர் (பொ.ஐ.முன்னணி, ஜே.வி.பி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள்) என எதிர்பார்க்கப்பட்டபோதிலும், வெறும் எட்டாயிரம் பேர் மட்டுமே கலந்துகொண்டதாக பி.பி.சி. சிங்கள ஒலிபரப்பான "சந்தேசிய" செய்தியாளர் எல்மோ பெர்ணான்டோ குறிப்பிட்டிருந்தார்.

இது ஜே.வி.பிக்கும், ஏனைய கூட்டுக்கட்சிகளுக்கும் கிடைத்த மிகப்பெரிய தோல்வியாகும். இக்கூட்டத்தில் உரையாற்றிய பொ.ஐ. முன்னணித் தூண்களில் ஒருவரான மங்கள சமரவீர விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கப்பட்டது தொடர்பாக இவ்வாறு கூறினார். "கப்பல் ஒன்று இலங்கையின் கிழக்குப் பகுதியை நோக்கிவருவதாகக் கடற்படையினர்- பாதுகாப்புச் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோவிற்கு அறிவித்தனர். அதன்பின்னர், அதுபற்றி ஜனாதிபதி சந்திரிகாவிற்கு அறிவிக்கப்பட்டது. முப்படைகளின் தளபதி என்ற வகையில் உடனடியாகத் தாக்கி அழிக்குமாறு உத்தரவிட்டதன் பின்பே அக்கப்பல் அழிக்கப்பட்டது. அதன்மூலம் "எதிர்காலத்தில் இலங்கைக்கு ஏற்படவிருந்த பாரிய அழிவுகள் தவிர்க்கப்பட்டது" எனச் சந்திரிகாவின் திறமை, நாட்டுப்பற்று, தூரப்பாவை பற்றியெல்லாம் புராணம் பாடப்பட்டது.

சிங்கள மக்களைப் பொறுத்தவரை "ராமன் ஆண்டால் என்ன ராவணன் ஆண்டால் என்ன" என்ற நிலைக்கு வந்துவிட்டார்கள்.

**விஜயன்**


யுத்தம் இல்லாது இருந்தாலே போதும் என்பதை அவர்களின் எதிர்பார்ப்பு.

ஜே.வி.பி. சீனச் சார்பு சோஷலிஸக் கொள்கைகளைப் பேசியதால் ஆரம்பத்திலிருந்தே "இந்திய எதிர்ப்பு" என்ற விடயத்தில் தீவிரமாக ஈடுபட்டுவந்தது. 1989 காலப் பகுதியில் .பம்பாய் வெங்காயம், மைசூர்ப்பருப்பு, சாரம் போன்ற பொருட்களும் தடைசெய்யப்பட வேண்டும் என்றும் சிங்கள மக்களுக்குப் போதித்தது.

(நாளை தொடரும்...)




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003





## போராட்டமோ போராட்டம்..!

எவரும் கனவில் கூட எதிர் பாராத, முற்றிலும் தன்னம்பிக்கையுடன் விளையாடி, SUPER SIX கடந்து SEMI FINAL வரை காலடி வைத்து நிற்கும் கென்ய அணியும், அதே போல் ஆரம்பத்தில் நெதர்லாந்து அணியுடன் ஆபத்தினை எதிர்நோக்கி வென்றும், அடுத்ததாக, அவுஸ்திரேலிய அணியுடன் குறைந்த ஓட்டங்களுக்குள் சுருண்டு, பல விமர்சனங்களையும் எதிர்ப்புக்களையும் சந்தித்து, அதன்பின் புதிய உத் வேகத்துடன், புதிய எழுச்சியுடன், ஆவேசங்கொண்டெழுந்து தொடர்ந்து 7 வெற்றிகளை தன்னகப்படுத்தி கென்ய அணிக்கு இந்த WORLD CUP இல் கைவந்த கலையாக இருந்து வருகின்றது. ஏன்...?

அவுஸ்திரேலிய அணி கூட 5 விக்கெட்டுக்களை இழந்து தான், வெற்றிக்காகப் போராடவேண்டியிருந்தது.

மறுபக்கமாக இந்திய அணிக்கு சச்சின் ஒரு புரத உணவு. தொடர்ந்து அதிக ரன்களைக் குவித்து வரும் சச்சினின் திறமைகளால் இந்திய அணி எழுச்சிபெற்று வெற்றிநடை போட்டு வருகின்றது.

பல முன்னணி அணிகளை விரட்டிவிரட்டி மண்கவ்வச் செய்யும்



ஒடும்பே - மும்மூர்த்திகளுக்கும் சாத்துவேன்.

WORLD CUP நிச்சயம் இவர்கள் கையில் என்று பலர் அடித்துக்கூறக் காரணமாக நிமிர்ந்து நிற்கும் இந் திய அணியும் மீண்டும் சந்திக்கப் போகின்றன.

இன்று KINGSMEAD, DURBAN மைதானத்தில் GMT நேரப்படி நண்பகல் 12 மணிக்கு, பகல் இரவு ஆட்டமாக நடைபெறும் இந்தப் போட்டியும் விறுவிறுப்பாகத்தான் இருக்கப் போகின்றது. இந்த இரு அணிகளும் இந்திய அணியின், மூவேந்தர்களான சிறிநாத், ஷாகிர் கான், நெஹ்ரா ஆகியோரின் மூர்க்கம், மாற்றணியைக் கலங்கடிக்கச் செய்கின்றது. இவை மட்டுமா? FLIYING FIELDERS ஆன கைவ், யுவராஜ் ஆகியோரின் பங்கு அப்பப்பா!

இவையெல்லாவற்றையும் எடுத்து நோக்கும்போது, இன்றைய ஆட்டம் பெரும் போராட்டமே.

யார் வெல்லப் போகிறார்கள்?



ஓங்காரம் ஒடுக்குவோம்

ஏற்கனவே SUPER SIX இல் சந்தித்ததும் - கென்ய அணி மிகமிகத் திறமையாக விளையாடி, கௌரவமான முறையில் தோல்வியைத் தழுவிக்கொண்டதும் வெளிப்படையே.

இந்திய, சிம்பாப்வே, அவுஸ்திரேலிய அணிகளுடன் விளையாடிய, ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரவிந்து ஷா, தொடர்ந்து 3 போட்டிகளிலும் 30 ரன்களுக்கு மேல் எடுத்துக் கொண்டது, அவர் BATTING இல் நல்ல FORM ஆக இருக்கிறார் என்று எடுத்தியம்புகின்றது. அத்துடன், ஆரம்ப ஆட்டக்காரர் கே.ஒபுயா மற்றும் ஒடும்பே, ஒட்டினோ ஆகியோரின் திறமைகளும், இந்திய அணிக்கு உஷார் நிலையில் இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன.

இதைவிட மேலாக, மிகமிக நுட்பமான, அதிபயங்கரமான FIELDING, குறிதவறாத BOWLING எல்லாமே, யார் மூட்டை முடிச்சுக்களுடன் சொந்த நாடு செல்லப்போகிறார்கள்?

கிரிக்கெட்டில் எதுவுமே உறுதியாகச் சொல்ல முடியாது. இறுதியாக டக்வேர்த் லூயிஸுக்கும் பதில் சொல்லவேண்டி வருமல்லவா?

என்ன இருந்தாலும் WORLD BEST BATSMAN கள் இந்தியாவில்தானே உள்ளனர். அதனால், அவர்களின் வெற்றி வாய்ப்புக்கு PLUS ONE போடலாம்தானே.

அத்துடன் DURBAN மைதானம் இந்தியாவின் பொறிகக்கும் BATTING இற்கு சாதகம்தானே. இவர்கள் FIRST BATTING எடுத்தால் கென்யாவுக்கு அதிக பாதகம்தானே.

சச்சின், ஷேவாக்கிலிருந்து கங்கூலி வரைக்கும் 50 PLUS எடுக்க வாய்ப்பு அதிகமாகவுள்ளது என்கிறார்கள்.

WAIT AND SEE.

- வீ.ஏ.கோவி

## உயர் விருது உனக்கே!

ஆட்டத்தொடர் நாயகன் 2003 இல் யார்? தற்போது உலகக்கிண்ணப் போட்டிகளில் இன்னும் இரண்டே இரண்டு ஆட்டங்கள் மட்டும் மீதமிருக்கும் இவ்வேளையில், சச்சின் டென்டுல்கர், இன்று ஆட்டநாயகனாக வருவாரானால், இவரைத்தவிர யாரும் அந்த இடத்தைப் பெறமுடியாது என்பது தெளிவாகிறது. புள்ளிகளின் அடிப்படையில் சமிந்த வாஸுக்கும், அத்தப்பத்துவுக்கும் மேலாக, நான்கு புள்ளிகளுடன் சச்சின் முதலிடத்தில் நிற்கிறார். இதுவரை இவர் பெற்ற மூன்று ஆட்டநாயகன் விருதுகளுக்காக 9 புள்ளிகள் பெற்றார். மேலும், இலங்கைக்கும் கென்யாவுக்கும் எதிராக அவர் பெற்ற 97 மற்றும் அரைச் சதத்துக்கு இன்னும் இரண்டு புள்ளிகள் பெற்றார்.

ஆட்டத்தொடர் நாயகன் விருது ஒவ்வொரு தனியாட்டத்திலும் வெற்றி கொள்ளும் ஆட்ட நாயகன் விருதின் அடிப்படையில் தீர்மானிக்கப் படுகின்றது. ஒவ்வொரு ஆட்டமுடிவிலும் சிறந்த மூன்று வீரர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். இவர்கள் முறையே மூன்று, இரண்டு, ஒன்று என்றவாறு புள்ளிகள் பெற்றுக் கொள்கிறார்கள். இவற்றின் தொகுப்பே இறுதியில் MAN OF THE SERIES என்ற பெரும் பெருமைமிகுந்த விருதிற்குக் காரணமாக அமைகிறது. இறுதிநாளில், இந்த விருதினை வழங்கப் போகிறவர், இன்றும் என்றும் உலகின் முதல்தர ALL ROUNDER ஆக விளங்கும், மேற்கிந்திய அணியின் முன்னாள் தலைவர், அங்கத்தவர் SIR. சோபர்ஸ்தான்.



சச்சின் — உங்களுக்கும் சந்தோசம் தானே

அரைஇறுதிப் போட்டிகள் தொடங்கும் வரையில் பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில், LITTLE MASTER 12 புள்ளிகளுடனும், அத்தப்பத்து, வாஸ் எட்டுப் புள்ளிகளுடனும், கங்கூலி ஏழு புள்ளிகளுடனும் முன்னணி வகிக்கிறார்கள். இதைவிட, ஆறு புள்ளிகளுடன் நான்குபேரும், ஐந்து புள்ளிகளுடன் ஒன்பது பேரும் இருக்கிறார்கள். இந்த வகையில் பார்க்கும்போது, முதல் நான்கு இடங்களில் எஞ்சியிருப்பவர்கள் சச்சினும், கங்கூலியும் மட்டுமே, ஆகவே, சச்சின் கூடுதலான சந்தர்ப்பம் கொண்டவராக இருப்பார் போலத்தெரிகிறது.

இன்னொருபுறம் சிந்திக்கும்போது, ஒவ்வொரு கௌரவத்தையும் பெற, ஒவ்வொரு FIELD இலும் எவ்வளவு திறமையைக் காட்ட வேண்டியிருக்கிறது என்பது பிரமையைத் தருகிறது. என்றாலும், எங்கள் பகுதிகளில் கதிரைகளை அலங்கரிக்கும் பலர், எத்தனை சாதனைகள் புரிந்தார்கள், புரிந்து பதவிகள் பெற்றார்கள் என்றால், நினைத்தாலே இனிக்கும்!!!. ஒன்றினைச் சொல்லலாம். சச்சின் இங்கு இருந்து கதிரைகள் தொடரில் எத்தனை சாதனை புரிந்தாலும், ஒன்றில் கூட இவருக்கு MAN OF THE MATCH கிடைத்திருக்காது. அறுபதுக்கு மேற்பட்டதெல்லாம் MAN OF THE CHAIR ஆக இருக்கும்போது, சச்சினாவது, கங்கூலியாவது. கதிரைக்கு அரோகரா.

- ஜோசப் கிருஸ்ணா

## அன்டி பிளவர் அவுஸ்திரேலியாவுக்கு

சிம்பாப்வேயின் அன்டி பிளவர் மற்றும் ஹென்றி ஒலங்கா இருவரும், சிம்பாப்வே அரசாங்கத்தின் அதிருப்திக்கு உள்ளாகியவர்கள். சிம்பாப்வேயில் ஜனநாயகம் செத்து விட்டது என்று எதிர்ப்புத் தெரிவித்து, கையில் கறுப்புப் பட்டி அணிந்து உலகக்கிண்ணப் போட்டிகளில் விளையாடியவர்கள் இவர்கள்.

இந்த நிலையில் அன்டி பிளவர் அவுஸ்திரேலியா சென்று, குடும்பத்துடன் குடியேறப் போவதாகச் செய்திகள் வருகின்றன. அவர் ஏற்கனவே அறிவித்தது போல், கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றாலும், தற்போது அவுஸ்திரேலியப் பிராந்திய அணி ஒன்றில் விளையாடப் போவதாக அறிவித்துள்ளார்.

அன்டி பிளவர், 2002 இன சிறந்த ஐந்து கிரிக்கெட் வீரர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டவர். ஒரு தரவரிசையின்படி, 2001 இன் டெஸ்ட் ஆட்டச் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் தெரிவு செய்யப்பட்டவர். சவுத் ஒஸ்ரேலிய அதிகாரிகள் கருத்துக்கூறும்போது, அவரது பல்வேறு திறமைகள், தங்கள் பிராந்திய இளைஞர்களின் கிரிக்கெட் தரத்தை உயர்த்தப் பெரிதும் உதவும் என்று கூறுகின்றனர். தற்போது 34 வயதாகும் அன்டி பிளவர், சிறந்த விக்கெட் காப்பாளர், துடுப்பாட்ட வீரர். முதல்தர ஆட்டங்களில் 10 ஆயிரம் ஓட்டங்கள், டெஸ்ட் போட்டிகளில் 4794 ஓட்டங்கள் பெற்றவர். ஒரு நாள் போட்டிகளில் 6786 ஓட்டங்களைக் குவித்தவர். 55 அரைச் சதங்கள் பெற்றிருப்பவர்.

அரசியல், நல்லதொரு கிரிக்கெட் வீரரை சிம்பாப்வேயிலிருந்து அகற்றுகிறது. அவரது திறமை வளர்ந்துவரும் சிம்பாப்வே கிரிக்கெட் அணிக்கு பெரும் நன்மைகளை அளித்திருக்கும். அதனை இப்போது சிம்பாப்வே இழக்கிறது. அன்டி பிளவரின் ஆற்றல் சிம்பாப்வேக்கு இழப்பு, அவுஸ்திரேலியாவுக்கு வாய்ப்பு.

- ஜக்சீல் -

## படுபடுதோல்வி..

1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் தொடங்கிய போர், 7 வருடங்கள் கழிந்த நிலையில் அதே உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் வைத்துப் பழிதீர்க்கப்பட்டிருக்கிறது. 1996 ஆம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டியில் சந்தித்த சகல அணிகளையும் போணியாக்கிய பெருமை இலங்கை அணிக்குண்டு. அதேவேளை, FINAL இல் வைத்து அவுஸ்திரேலிய அணியைத் தோற்கடித்து, WILLS WORLD CUP உடன் நாடு திரும்பியவர்கள் இலங்கை அணிவீரர்கள். 2003 ஆம் ஆண்டு உலகக் கோப்பை முதலாவது அரையிறுதிப் போட்டியில், அவுஸ்திரேலிய அணியிடம் ஏற்பட்ட தோல்வி அவர்களை, அவர்களுடைய அணியைச் சற்றுச் சிந்திக்க வைத்திருக்கின்றது. இவர்களுக்கு அவுஸ்திரேலிய அணியிடம் ஏற்பட்ட உளரீதியான பயம்தான் காரணம். ஏனெனில், அவுஸ்திரேலிய அணியின் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாது, 8 BATSMEN களைக் களமிறக்கியது. ஆனால், அவுஸ்திரேலியாவின் அசுரத்தனமான வேகப்பந்து வீச்சுக்கு முகங்கொடுக்க முடியாது, தலைவர் உட்பட அனைத்துத் தொண்டர்களும் திணறியது மிகவும் வேடிக்கைக்குரியது. இலங்கை அணி, 212 ஓட்டங்களுக்குள்,



அரவிந்த - GOOD BYE!

அவுஸ்திரேலிய அணியைக் கட்டுப்படுத்தியவுடன் வெற்றிக்களிப்புடன் மைதானத்திற்குள் களமிறங்கியது. ஆனால், அந்தோ பரிதாபம் - லீயும் மக்ராவும் விட்ட அம்புகளுக்கு, இவர்களால் ஈடுகொடுக்க முடியாததுதான். அரவிந்த கொடுத்த பிடி ஒன்று நழுவவிடப்பட்டாலும், அவர் ஒரு நம்பிக்கையுடன் களமாடினார். ஆனால், சங்கக்கார அவரை RUN OUT ஆக்கினார். அத்துடன் இலஙகை அணியின் உலகக் கோப்பை 2003 கனவு தகர்ந்தது. இருந்தும் சங்கக்காரவும், வாஸும் முழு ஐம்பது ஓவர்களையுமாவது தாக்குப் பிடிப்போம் என்று முயற்சித்தபோது, மழை வந்து வேண்டாம் உங்களுக்கு இந்த அவமானம் என்று, ஆட்டத்தை இடைநிறுத்தியது. உடனேயே டக்வேர்த்தும் லூயிசும் களமிறங்கினார்கள். அவர்களின் தீர்ப்புப்படி, அவுஸ்திரேலியா 48 ஓட்டங்களால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இந்தப் போட்டியில் வெற்றி தோல்வி எல்லாவற்றையும் தாண்டி, ஒரு மனிதப் பண்பு தெரிந்தது. அது என்னவென்றால், அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பவீரர் கில்கிறிஸ்ட், மத்தியஸ்தர் NOT OUT என்று தீர்ப்பு வழங்கினாலும், தான் OUT என்று தெரிந்து மைதானத்தை விட்டு வெளியேறியது. WELLDONE KEEPER BATSMAN. பெரும்பாலும் இலங்கை அணியின் பல வீரர்களுக்கு இந்த WORLD CUP இற்குப்பிறகு சாவுமணிதான். அத்துடன், COACH இற்கும் கல்தா. இலங்கை அணி, தோல்வியிலும் கண்ட வெற்றி, மஹேல ஜயவர்த்தனவை தொடர்ந்து அணியில் வைத்து, அவர் எடுத்த முட்டைகளை எல்லாம் பொரித்ததும், அவிஷ்க குணவர்த்தனவுக்கு சந்தர்ப்பம் கொடுக்காமல் பழிவாங்கியதும்தான். இது BCCSL இனது பிழையா? அல்லது தலைவர் SANATH உடைய பிழையா? ஆனால் SEMI FINAL வரைக்கும் வந்தது பாராட்டுக்குரியது. CONGRADULATIONS SRILANKA.

- பி.என்.சுதர்சன்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# போர்நிறுத்தத்தில் புதிய விதிகள்; கடற்படையினர் கடும் ஆட்சேபம்!

விடுதலைப் புலிகளுடனான அரசாங்கத்தின் புரிந்துணர்வு உடன்பாட்டில் புதிய விதிமுறைகளைச் சேர்ப்பதற்கு கடற்படை எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் மாற்றம் செய்வதானது, புலிகளின் சுதந்திரமான கடல் நடமாட்டத்துக்கே வழி ஏற்படுத்தும் என்றும் கடற்படை எச்சரித்துள்ளது.

இது குறித்து கடற்படை தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது ,

புரிந்துணர்வு உடன்பாட்டில் மாற்றங்களைச் செய்து, நாட்டைப் பாதுகாப்பதற்கான கடற்படையினரின் உரிமைகளை எவரும் சிதைத்து விட முயற்சித்துவிடக்கூடாது. நாட்டின் பாதுகாப்புடன் இணக்கப்பாடு செய்துகொள்ள, அரசாங்கமோ அல்லது அரச தூதுக்குழுவோ ஹெக்கோனில் நடைபெறும் பேச்சுக்களில் யாருடைய அழுத்தத்துக்கும் உட்பட்டுவிடக்கூடாது.

புரிந்துணர்வு உடன்பாடு அமுலாக்கப்பட்டபோது, கடற்படையுடன் எவரும் கலந்தாலோசிக்கவில்லை. எனினும், கடற்படை அரசாங்கத்துக்கு ஆதரவாகவே செயற்பட்டுவருகிறது.

புலிகள், ரோலர்கள் உட்பட 45 கடற்கலங்களை வைத்திருப்பதுடன், இவற்றின் மூலம் ஆயுதக் கடத்தலிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

முல்லைத்தீவில் மட்டுமே ஆயுதங்களை இறக்கக்கூடிய தளவசதிகளைக் கொண்டிருந்த புலிகள், புரிந்துணர்வு உடன்பாடு அமுலுக்கு வந்த பின்னர், வாகரைக்கும் அந்த வசதிகளை விஸ்தரித்துள்ளனர் என்று மேலும் கடற்படை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ICC Cricket World Cup South Africa 2003

உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

அரை இறுதி ஆட்டம்

இந்தியா Vs கென்யா - D/N KINGS MEAD DURBEN 6.30 p.m

# கடும் பனி பெய்வதால் உணவுக்கு அதிக விலை

## பிரதிநிதிகளிடம் அகாஷி தெரிவிப்பு

(ரோக்கியோ)

பேச்சுவார்த்தை நடைபெறும் ஹோட்டேல் அமைந்துள்ள மலைப் பகுதியில் தற்போது கடும்பனி பெய்துகொண்டிருப்பதனால்தான், இங்கு உணவுப் பொருட்களின் விலைகள் அதிகமாக இருப்பதாக, நேற்றைய பேச்சுக்களில் கலந்துகொண்ட ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசுசி அகாஷி நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்.

இப்பிரதேசம் பொதுமக்கள் குடியிருப்புக்களில் இருந்து தனியாக பிரித்தெடுக்கப்பட்ட ஓர் பகுதியென்பது குறிப்பிடத்தக்கது.

மதிய உணவு 3800 ஜப்பானிய யென் முடிகிறது. இலங்கை ரூபாப்படி ஒரு ஜப்பானிய ஜென் 82 இலங்கை சதத்திற்குப் பெறுமதியானது. தேநீர் ஒரு கோப்பை 380 யென். இதனால் பேச்சுக்களில் கலந்து கொள்பவர்களுக்கு சிரமங்கள் ஏற்படுவது உண்மை என்று அகாஷி குறிப்பிட்டார்.

## வாகரை முதலாக நெடுந்தீவு வரை 'வருண கிரண'

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தினைக் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் கடற்படையினர் ஒப்பரேசன் 'வருண கிரண' நடவடிக்கையினை நெடுந்தீவு முதல் வாகரை வரை விஸ்தரித்துள்ளனர்.

மேலும், விடுதலைப் புலிகளின் ஆயுதக்கடத்தலைக் கட்டுப்படுத்த, முல்லைத்தீவுக் கடற்பரப்பில் இருந்து திருகோணமலை கடற்பகுதிவரை, இருபத்தி நான்கு மணி நேரம் கடற்படைக் கப்பல்கள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகக் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (10)

# நெதர்லாந்து பிரதி தூதுவர் யாழ்ப்பாணம் விஜயம்

நெதர்லாந்து நாட்டின் இலங்கைக்கான பிரதித் தூதுவர், யாழ்ப்பாணத்துக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் 25 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரும் இவர், அரச அதிபருடன் முக்கிய விடயங்கள்பற்றி ஆராயவுள்ளார். இச்சந்திப்பு யாழ். செயலகத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதைத் தொடர்ந்து இவர், பல இடங்களுக்கும் சென்று பார்வையிட்டு பல உயர் அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

# கண்ணி அகற்றும் அமெரிக்க குழு மீண்டும் யாழ்ப்பாணம் வருகிறது

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் மிதிவெடி அகற்றும் பணியை மேற்கொள்ள, மீண்டும் அமெரிக்க கண்ணிவெடி அகற்றும் குழு வரவுள்ளதாக, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது. இக்குழுவில் இரண்டு குழுத் தலைவர்கள், 12 கண்ணிவெடியகற்றும் நிபுணர்கள், பயிற்சிபெற்ற நாய்கள், நான்கு நாய் பராமரிப்பாளர்கள் ஆகியோர் அடங்குகின்றனர்.

கடந்த ஆண்டு இக்குழுவினர் சுமார் ஆயிரம் கண்ணிவெடிகளை அகற்றியதாகவும் - இதன் இரண்டாம் கட்டப் பணியைத் தொடரவே, இக்குழுவினர் மீண்டும் வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அரசு மாறினும் சர்வதேச உதவியுடன் மாற்றீடான முயற்சிகள் தொடரும்!

## அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

(ரோக்கியோ)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் வீழ்ச்சியுற்றால், அமைதி முயற்சிகளுக்கான மாற்றீடான வழிமுறைகளைச் சர்வதேசப் பின்னணியுடன் புலிகள் மேற்கொள்வார்கள் என்று, புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

முதல்நாள் பேச்சுக்களின் முடிவில் செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐ.தே.மு. அரசாங்கம் அகற்றப்பட்டாலோ அல்லது நெருக்கடிக்குள்ளானாலோ, சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியின் மூலம் நியாயமான தீர்வு கிடைக்கும் என தமிழ் மக்கள் எண்ணவில்லை. சுதந்திரக் கட்சியுடன் இணைந்துள்ள ஜே.வி.பி. அமைதி ஏற்படுவதை விரும்ப மாட்டாது.

எனவேதான், அரசாங்கம் மாறினாலும் சர்வதேச உதவியுடன் அமைதி முயற்சிகளுக்கான மாற்றீடான வழிமுறைகளை புலிகள் கைக்கொள்ளுவர். இந்த மாற்றீடான வழிமுறை என்ன என்பது குறித்து தருணம் வரும்போது அறிந்துகொள்ளலாம்.

கடந்த 10 ஆம் திகதி கொழும்பில் நடத்தப்பட்ட அமைதி எதிர்ப்புப் பேரணி மூலம் சந்திரிகாவின் நிலைப்பாட்டை உலகம் அறிந்துள்ளது.

இப்போதுள்ள ரணில் அரசாங்கம் பலமற்றதாக உள்ளதால், படைகள் தன்னிச்சையாக நடக்க முனைகின்றன.

அரசாங்கம் பல மற்று இருப்பதால் படைகள் மீது நடவடிக்கை எடுப்பது சாத்தியமற்றதாகவுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

**நேற்றைய....**

களில் கனேடிய சமஷ்டிமுறை குறித்து ஆராயும் மூன்று நிபுணர்கள் கலந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர்கள் தமிழகப் பொலிஸாரால் கைது

புழல் மற்றும் திருச்சி அகதி முகாம்களிலிருந்து, அண்மையில் தப்பியோடிய ஒன்பது ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர்கள், தமிழகப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தற்போது மதுரை சிறையில் வெளிநாட்டவர் மற்றும் கடவுச்சீட்டு சட்டவிதியின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரத்தில் விடுதி ஒன்றில் தங்கியிருந்த இவர்கள், அங்கிருந்து இலங்கைக்கு தப்பிச் செல்லத் திட்டமிட்டிருந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஈராக் மீதான தாக்குதல் ஆரம்பிக்கும்

ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதல் இன்றுகாலை ஆரம்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தாக்குதலுக்குரிய தமது நிலைகளில் அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் நிலையெடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



அமெரிக்கத் தாக்குதலுக்கு அஞ்சி தப்பியோடும் ஈராக்கிய மக்கள்.

## வாகனத்தில் மோதுண்டு பெண் படுகாயம்

கண்டி வீதியினை கடக்க முற்பட்ட பெண் மீது, கன்டர் வாகனம் மோதியதில் அவர் படுகாயமடைந்தார்.

நேற்றைய தினம் சாவகச்சேரி தபாற்கந்தோர் சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில், மோதுண்ட பெண்மணி அருகிலுள்ள காணி ஒன்றினுள் தூக்கி வீசப்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவத்தில், கொடிகாமத்தைச் சேர்ந்த மகேந்திரம் அருந்தவராணி (வயது 44) என்னும் பெண்மணியே காயமடைந்தவராவார்.

# குடாநாட்டில் மக்கள் காணி...

குறித்தும், சிறான் அமைப்புக்கு ஜப்பான் செய்யவேண்டிய உதவிகள் குறித்தும் ஆராயப்பட்டன.

வட - கிழக்கு மக்களின் புனர்வாழ்வுப் பணிகளில், ஜப்பானிய அரசு நேரடியாகப் பங்குபற்றும் என்பது, அகாஷி நேற்றைய பேச்சுக்களில் பங்குபற்றியதிலிருந்து தெரிகிறது.

**மனிதஉரிமை விவகாரம்**

மாலை அமர்வில் மனிதஉரிமை இயக்கத்தைச் சேர்ந்த இயன் மார்ட்டின் கலந்துகொண்டார். இவர் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தார். இருதரப்பும் மனித உரிமை தொடர்பாகக் கையாள வேண்டிய சில விடயங்களை அவர் குறிப்பிட்டிருந்தார். இது குறித்து நீண்ட நேரம் நாம் விவாதித்தோம். தமிழர் தரப்பில் பயங்கரவாதத் தடைச்சட்டம், களுத்துறை தமிழ்க் கைதிகள் நிலைமை, சிறுவர்கள் நலன், பெண்ணுரிமைகள் என்பனபற்றி நாம் பேசினோம். ஐ.நா. சாசனத்திற்கு அமைய, இருதரப்பும் மனித உரிமை தொடர்பான ஒப்பந்தம் ஒன்றைச் செய்வது குறித்து மார்ட்டின் குறிப்பிட்டார். ஆனால் உடனடியாக இல்லை. இது குறித்து விரிவாக விவாதித்த பின்பே, இந்தப் பிரகடனம் அடுத்த பேச்சுக்கள் தாய்லாந்தில் நடைபெறும்போது வெளியிடப்படும்.

தனிமனிதஉரிமை என்று மட்டுமல்ல, ஒரு தேசியத்தின் உரிமையும் குறிப்பாக, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையும் அந்தப் பிரகடனத்தில் குறிப்பிடப்படும். இவ்விடயத்தை, கட்டாயமாக மனித உரிமைப் பிரகடனத்தில் சேர்க்குமாறு நாம் வலியுறுத்தியுள்ளோம்.

**உயர் பாதுகாப்பு வலயம்**

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் பலகல்ல, உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக சில விடயங்களை வெளியிட்டிருந்தார். அதன்படி, உயர்பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே எழுநூற்றைம்பது வீடுகளில் இராணுவத்தினர் தங்கியிருப்பதாகவும், இவற்றிலிருந்து உடனடியாக வெளியேறுவதாக இருந்தால், இராணுவம் சில தளங்களை வெளியே அமைக்க வேண்டும் எனவும் - இதற்காக, பொதுமக்களின் பயன்படுத்தாத காணிகளை இராணுவம் சுவீகரிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு நாம் நேற்றைய பேச்சுக்களில் கடும் ஆட்சேபனையைத் தெரிவித்தோம். பொதுமக்களின் வீடுகளிலிருந்து, பொதுமக்களின் காணிகளுக்கு இராணுவம் இடம்மாறுவது எதுவித அர்த்தமும் இல்லாதது. நாமும் அனுமதிக்கமாட்டோம். மக்களும் அனுமதிக்கமாட்டார்கள். யாழ்ப்பாண மக்களைப் பொறுத்தவரை கல்வியும், காணியும் முக்கியம். நாம் போவதற்கு இடமில்லை என்று கூறும் இராணுவம், பொதுமக்களின் காணிகளை சுவீகரிக்க புலிகள் அனுமதிப்பார்களா? என்று கேட்டிருந்தனர். இதனை நாம் மறுத்து, காணிகளைப் பயன்படுத்தாவிட்டாலும் வெளிநாடுகளிலிருந்து திரும்பி வரும் மக்கள் அவற்றைப் பயன்படுத்தலாம். இது குறித்து நாம் இறுக்கமாகவே கதைத்தோம்.

**சிறானின் செயற்பாடு**

சிறானின் செயற்பாடு மந்த கதியிலேயே நடப்பதாக தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். மீள் குடியமர்வு இன்னும் நடைபெறவில்லை. சிறானின் செயற்பாடும் இன்னும் விரிவாக்கப்படவில்லை.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சீரழிந்து போயுள்ள வீதிகள் திருத்தப்படவில்லை. இவற்றை உடனடியாகச் சீர்செய்ய சிறானுக்கு நிதியுதவிகள் தேவையென தமிழ்ச்செல்வன் கேட்டுள்ளார்.

அத்துடன், சிறானின் நிர்வாகக் கட்டமைப்பு பலப்படுத்தப்பட வேண்டும். உலக வங்கியில் இருந்து நிதியுதவியைப் பெற அரசு உதவ வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டோம் என்றார் பாலசிங்கம்.

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.65 | 97.09 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 154.31 | 155.71 |
| 1 யூரோ | 106.36 | 107.65 |
| 1 சுவிஸ் பிராங் | 72.35 | 73.06 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 59.00 | 60.15 |
| 1 ஜப்பானிய யென் | 00.82 | 00.83 |
| 1 சவூதி றியால் | 25.83 | 25.83 |

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.